உ

சிவமயம்.

ஓம் மஹாகணபதிதுணை.

ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்கிய சதகம்.

இது

திருக்களராண்டவரென்னும்

ஸ்ரீ [illegible] ஞானதேசிகர் பாதசேகரராகிய

ஸ்ரீ [illegible] சுவாமிகளால்

செய்யுள்வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டு,

[illegible] மாணாக்கராகிய

இரா[illegible]ஷ்ண சுவாமிகளால்

இயற்றப்பட்ட

பொழிப்புரை, அரும்பதவுரை,

ஸ்ரீ பர்த்ருஹரி சரித்திரச் சுருக்கங்களுடன்

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912

விலை அணா 3.

[Copyright Registered.]

உ

ஸ்ரீ பர்த்ருஹரியின் சரித்திரச்சுருக்கம்.

இந்நூலாசிரியரும் பிரஹ்மநிஷ்டருமாகிய பர்த்ருஹரி யென்னும் மஹாநுபாவர், ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாதாசாரிய சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீகோவிந்த பகவத்பாதாசாரிய சுவாமிகளின் புத்திரரென அநேக கிரந்தங்களிற் காணப் படுகின்றனர். ஒருகாலத்தில் ஸ்ரீ கோவிந்த பகவத்பாதாசாரிய சுவாமிகள் வித்தைகற்கும் விழைவோடுகூட பூப்பிரதக்ஷிணமாக யாத்திரை செய்து வந்து ஒரு விருக்ஷத்தடியிற் சற்று நேரந் தங்கியிருந்தனர். அவ்விருக்ஷத்தின் உபரிபாகத்தில் ஒரு பிரஹ்மராக்ஷஸு சாபவசத்தால் அநேககாலம் வசித்திருந்தது. தெய்வகதியால் இருவருக்குஞ் சந்திப்பு நேர்ந்தவுடன் பிரஹ்மரக்ஷஸ் கீழே யிறங்கி வந்து "முற்பிறப்பி லொரு பிராமணனா யிருந்து அநேக வித்தைகளைக் கற்றிருந்த யான் அவைகளை அந்நியருக்கு உபதேசிக்காத தோஷவசத்தால் இப்பிரஹ்மராக்ஷஸாகிய ஜென்மமடைந்தனன். இனி அவைகளை யுனக்குபதேசித்து விட்டு இச்சன்மசாபல்ய மடையலாமென்று நினைக்கின்றென்" என்றது. அதைக் கேட்டவுடன் சுவாமிகள் சந்தோஷமடைந்து "கும்பிடப்போ[illegible] தெய்வம் குறுக்கே வந்தது" என்னும் பழமொழிப்படி "விழைந்தது முடிந்தது" எனக் கருதி அவ்வித்தைகளைக் கற்கத்தொடங்கினர்.

ஆறுமாதத்தினுள் சகல வித்தைகளையும் ஆகார நித்திரைக [illegible]ன்றி மிகுந்த சிரமத்தோடுகூடிக் கற்றார். அவ்வாறுமாச[illegible]முஞ் சென்றவுடன் பிரஹ்மராக்ஷஸ் தன் சரீரத்தை விட்டு [illegible] கைவல்யத்தை யடைந்தது. சுவாமிகளனுக்கிரகம் பெற்[illegible]கொண்டு வரும் வழியில் ஒரு தாசியின் கிரகத்தின் வெ

ளித்திண்ணையில் விஸ்ராந்திக்காகச் சயனித்திருந்தனர். ஆறு மாதகாலமாய்த் தாமெடுத்துக்கொண்ட சிரமத்தால் நித்திரை செய்யவும், ஆறுமாதபரியந்தம் ஒரே நித்திரையாக இருந்து விட்டனர். அந்தத் தாசி வந்து பார்த்து பயந்து வைத்தியர் பாற் காண்பிக்க "இது நித்திராதோஷம், இது தெளிய ஆறு மாதஞ் செல்லும், அதுவரை அன்னசாரமிட்டு இரக்ஷிக்க வேண்டும்" என்றார். அதுமுதல் அத்தாசியின் மகளாய ஒரு யுவதி சுவாமிகளின் தேகரக்ஷணத்தின்பொருட்டு அன்னத்தைக் கரைத்துத் தேகத்தில் பூசுதல் முதலிய பணிவிடைகளைச் செய்துகொண்டு வந்தாள். அவ்விதம் ஆறுமாதஞ் சென்றபின் சுவாமிகள் நித்திரை கலைந்தவுடன் மிகுந்த வுபசாரத்தால் மயக்கந் தெளிந்து, மிகுந்த வணக்கத்துடன் எதிர்நின்ற அச்சிறுமியை நோக்கி, "பெண்ணே! நான் இவ்விடம் வந்திருந்ததன் பின் நடந்ததென்ன?" என வினவ, "சுவாமி! தாங்களிவ்விடம் வந்து இன்று ஆறுமாதமாயது; இதுவரை நித்திரையி லிருந்தீர்கள். இவ்வாறுமாசபரியந்தமும் யான் தங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தேன்" என்று அச்சிறுமி கூறினாள். உடனே சுவாமிகள் மிகுந்த சந்தோஷத்துடன் "பெண்ணே! உனக்கு [illegible]ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். "சுவாமி! யுவதிகளுக்குப் புருஷபாக்கியமே சிறந்த பாக்கியமாதலால் தாங்கள் என் வாணுயிருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தனள். உடனே சுவாமிகள் "ஹா! ஹா!! நான் பிராமணனு யிருக்கின்றேன்; இவளோ சூத்ர ஸ்திரீயா யிருக்கின்றனள். ஆகையால் விவாகஞ் [illegible] தல் எங்ஙனங் கூடும்? நான் இவளுடைய இஷ்டத்தை [illegible] வேற்றுவதெங்ஙனம்?" என்றிவ்வாறு சற்றுநேரஞ் சிந்[illegible]

ஸ்மிருதியில் "பிராஹ்மணனுனவன் பிரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நான்கு வர்ணங்களினின்று நான்கு ஸ்திரீகளை ஏககாலத்தில் விவாகஞ் செய்யலாம்" என்று கூறியிருக்கும் விதியை நோக்கிச் சமாதானப்பட்டு உடனே அந் நகரத்திலுள்ள அரசன் மந்திரியாகிய ஒரு பிராமணரது புத்திரியையும், அந்நகரத்தரசனது குமாரியையும், ஒரு உயர்ந்த வைசிய புத்திரியையும், தாசியாகிய முற்கூறிய சூத்திர ஸ்திரீயையும் ஏககாலத்தில் விவாகஞ் செய்து அவ்வரசனது அரண்மனையில் வசித்திருந்தனர். சில வருடங்கள் சென்றபின் அப்பிராமண புத்திரியினின்றும் **வரருசி** யென்றொரு புத்திரனும், க்ஷத்திரிய குமாரியினின்றும் **விக்ரமாதித்தன்** என்றொரு புத்திரனும், வைசிய ஸ்திரியினின்றும் **பட்டி** யென்றொரு புத்திரனும், சூத்திர ஸ்திரீயினின்றும் பர்த்ருஹரி யென்றொரு புத்திரனும் உற்பத்தியாயினர். புத்திரர்களோடு சிலகாலமிருந்து பின்னர் காட்டுக்குத் தபசு செய்வதற்காகச் சுவாமிகள் சென்றனர். அதிபால்யத்திலேயே அம்மூத்த புத்திரனுகிய **வரருசியும்** தபசு செய்யும்பொருட்டுக் காட்டுக்குச் சென்றார். இவர் ஒரு கிரந்தஞ் செய்துளார். அதற்கு ஸ்ரீ சங்கர பூஜ்யபகவத்பாத ஆசாரிய சுவாமிகள் பாஷ்யஞ் செய்திருக்கின்றனர். சில வருடஞ்சென்றபின் **விக்ரமாதித்தனும், பட்டியும்** தபஞ்செய்து யாவையும் பெறக் காட்டுக்குச் செல்லத் துணிந்து தங்கள் சகோதரனுகிய **பர்த்ருஹரியினிடம்** ராஜ்யத்தை யொப்புவித்துக் காட்டுக்குச் சென்றனர். இங்ஙனம் பர்த்ருஹரி ராஜ்யபரிபாலனஞ் செய்துவருங்கால் ஒரு தினத்தில் ஒரு முனிவர் பர்த்ருஹரியைப் பார்க்க வருங்கால் ஒரு மாம்பழத்தைக் கொண்டுவந்து கொடுத்து இவ்வண்ணஞ் சொன்னார்: "ஓ

மஹாராஜனே! இப்பழம்போன்று யாண்டுங் கிடைத்தலரிது, இப்பழத்தைப் புசித்தாற் கிழப்பருவமுறுது எழிலாய தருணப்பருவத்துடன் சிரஞ்சீவியாய் வாழலாம். ஆதலால், இப்பழத்தைத் தாங்கள் புசியுங்கள்" எனக் கூறி, அம்முனிவர் தமது ஆச்சிரமத்திற்குச் சென்றார். அரசன் அப்பழத்தை வாங்கி "நாம் இப்பழத்தைப் புசிப்பதைவிட நமது பட்டஸ்திரீ புசிப்பாளேயாயின் அவள் அழகிய யுவதியாகவே யெப்போது மிருப்பள், நமது மாணபரியந்தம் யௌவன ஸ்திரீயோடுகூடவிருந்து சுகத்தை யனுபவிக்கலாம். நாம் இப் பழத்தைப் புசித்தால் நமது பட்டஸ்திரீ இறக்குங்காலையில் நாம் யாரோடிருந்து சுகத்தை யனுபவிப்போம். ஆதலால் நமது பட்டஸ்திரீ புசிப்பதே உசிதம்" என நினைத்து அப்பழத்தைத் தன் மனைவிக்காக அர்ப்பணஞ் செய்தார். மனைவி, அப்பழத்தை வாங்கி "இப்பழத்தை நாம் புசிப்பதைவிட நமது சோர புருஷனுகிய சாரதிக்குக் கொடுப்போம்" என்று தனது சோர நாயகனுகிய குதிரைக்காரனுக்குக் கொடுத்தாள். அவன் அப் பழத்தை வாங்கி "நாம் இப்பழத்தைப் புசிப்பதைவிட நமது சோரநாயகிக்குக் கொடுப்போம்" என்று அவ்வரண்மனை கூட்டும் ஒரு வேலைக்காரிக்குக் கொடுத்தான். அவள் அப்பழத்தை வாங்கி அப்பழத்தின் மகிமை தெரியாமல், "இப்பழத்தை நமது குழந்தைகளுக்குக் கொடுப்போம்" என்று நினைத்து அப்பழத்தைத் தன் குப்பைக் கூடையின்பேரில் வைத்துக் கொண்டு போகுங்கால் அரசன் மாளிகையினின்று பார்த்து, "இப்பழம் நமக்கு முனிவர் கொடுத்த பழம்போன் றிருக்கின்றதே" என்று நினைத்து அவ்வேலைக்காரியைக் கூப்பிட்டு "இப்பழம் ஏது?" என்று விசாரித்தார், அவள் "இப்பழத்தை

எனக்குக் குதிரைக்காரன் கொடுத்தான்" என்றாள். உடனே குதிரைக்காரனைக் கூப்பிட்டு, "அடா! இப்பழம் உனக்கு யார் கொடுத்தது?" எனக் கேட்டார். உடனே அவன் மிகுந்த பயத்துடன், "ஸ்வாமி! தங்கள் மனைவி யெனக்குக் கொடுத்தாள்" என்றான். உடனே அரசன் மிகுந்த கோபத்துடன் தன் மனைவியை யழைத்து விசாரித்ததில் யதார்த்தமாக நடந்த காரியம் முழுமையுந் தெரிந்து, "ஹா! ஹா!! நாம் இப்பேர்ப்பட்ட துஷ்ட ஸ்திரீயோடு சகவாசஞ் செய்யலாமா? இவளை நாம் இப்போது கொன்று, இனி யொரு ஸ்திரீயை விவாகஞ் செய்யலாமென்றாலோ, அவளும் இவ்வித குணமுடையவளா யிருந்தால் எப்படி நம்புகிறது? ஆதலால் இன்றுமுதல் யாதொரு விஷய இன்பத்தையும் விரும்பேன்" என்று இவ்வாறு சிந்தித்து அப்பழத்தைத் தானே புசித்துத் தனது கிரகக் கிராம க்ஷேத்திர தனதான்யாதி சகல சம்பத்துக்களையும் இராஜ்யத்தையும் விட்டு அன்றே காட்டுக்குச் சென்று தபசு செய்யத்தொடங்கினார். இங்ஙனம் காய்கனிகள் பத்திரங்கள் இவைகளைப் புசித்துக்கொண்டு குகைகள், ஆரண்யங்கள், மணல்மேடுகள், நதிதீரங்கள் முதலிய இடங்களிற் சஞ்சரித்துக்கொண்டிருக்குங்கால், ஒரு நகரத்தினருகிலுள்ள ஒரு குப்பைமேட்டிற் சுவாமிகள் யோக நித்திரையி லிருந்தார். அந்நகரத் தரசனானவன் மிகுந்த தருமசிந்தனையுடையவனாதலால், நான்கு தூதர்களைக் கூப்பிட்டு, "யாரேனும் பிக்ஷுக்களிருந்தால் அழைத்து வாருங்கள்; வந்தால் அவர்கள் அபேக்ஷித்ததைக் கொடுக்கிறேன்; கொண்டு வருபவர்கட்கும் வேண்டிய சன்மானங்களைச் செய்கிறேன்" எனக் கட்டளையிட்டு நான்கு திசைகளுக்கு மனுப்பியிருந்தனன். அங்ஙனமே அந்தூதர்

கள் சஞ்சரித்து வருங்கால், முற்கூறிய குப்பை மேட்டில் சுவாமிகள் சயனித்திருப்பதைப் பார்த்து "ஓ பிக்ஷுவே! நீ எங்கள் அரசன் அரண்மனைக்கு வந்தால் இன்றே யுனது தரித்திரம் நீங்கிவிடும். ஆதலால் நீ சற்றுந் தாமதம் பண்ணாமல் என்னோடு கூடவா" என்று அத்தூதர்களிலொருவன் அழைத்தான். அதற்குச் சுவாமிகளொன்றும் பேசாமல் மௌனமாய் நிஷ்டையிலிருந்துவிட்டார். உடனே சுவாமிகள் இங்ஙனமிருப்பதைத் தூதன் பார்த்து, "நம்மரசனிடம் போய்ச்சொன்னால் நமக்கு ஏதேனும் சன்மானஞ் செய்வார்" என அதிசீக்கிரத்தில் அரண்மனைக்குச் சென்று அரசனுக்குத் தெரிவித்தான். உடனே அவ்வரசன் சர்வவைபவங்களுடன் யானை யேறி சுவாமிகளிருக்குங் குப்பைமேட்டை யடைந்து யானைவிட்டிறங்கி, "ஓ பிக்ஷுவே! உனக்கு என்ன வேண்டுமோ அதைக் கேட்டால் நான் இக்கணத்திலேயே கொடுக்கின்றேன்; எனது இராச்சியத்தைக் கேட்டாலும் கொடுக்கின்றேன்; இக்கிரீடத்தையுஞ் சூட்டுகின்றேன், சற்று வாய்திறந்து வேண்டியதைக் கேட்கவேண்டும்" என்றான். உடனே சுவாமிகள் புன்னகையோடு "ஓ அரசனே! நான் இராச்சியம், சதுரங்க சேனை, கிரீடமுதலிய யாவையுங் கொடுத்துத்தான் இக்கந்தையையும் கௌபீனத்தையும் வாங்கித் தரித்திருக்கிறேன். ஆதலால் எனக்கு உன் செல்வம் யாதொன்றும் வேண்டுவதில்லை" என்றார். உடனே அரசன் மிகுந்த பயத்தோடுகூட "ஹா! ஹா!! நமது சக்ரவர்த்தியாகிய பர்த்ருஹரியன்றோ இவர்? நாம் தெரியாமல் அபசாரம் பண்ணிவிட்டோமே" என்று சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து, "சுவாமி! அடியேன் அறியாமற் செய்த அபசாரத்தைப் பொறுத்தருள

வேண்டும்” என்று பிரார்த்தித்தான். உடனே சுவாமிகள் சந்தோஷ பூரிதராய் “ஓ அரசனே! நீ யாதொரு அபசாரமுஞ் செய்யவில்லையே, இப்படி தருமத்தைப் பரிபாலிப்பவனாகிய உன்னிடத்தில் யான் மிகச் சந்தோஷ முடையவனா யிருக்கின்றேன்” என, அவ்வரசனுக்கு அனுக்கிரகம் புரிந்து, அவ்விடம் விட்டெழுந்து காட்டுக்குச் சென்று நிஷ்டை செய்து கொண்டிருந்தார். இங்ஙனஞ் சிலகாலங் காட்டி லிருக்கும் போது, பரமேசுவரனும் பார்வதிதேவியுமாகக் கைலாசத்தி லிருந்து, விமானமேறிச் செல்லுங்கால், கருணாமூர்த்தமாகிய பார்வதிதேவி சுவாமிகள் (பர்த்ருஹரி) தபசு செய்வதைப் பார்த்து மனமிரங்கி, ஈசுவரனிடம் இவ்வண்ணஞ் சொல்லலுற்றாள்: “சுவாமி! பர்த்ருஹரி மஹா தபசு செய்கின்றானே! மகா சிவபக்தனுமிற்றே! மிகத் தரித்திர அவஸ்தையோடு கூடியிருக்கின்றானே! ஏதாவது கொடுக்கக்கூடாதா!” என்றனள். அதைக்கேட்டு “தேவீ! அவன் நித்திய திருப்தனாயிருத்தலின், ஒன்றும் அபேக்ஷிக்கமாட்டான்” எனப் பரமசிவன் அருளிச் செய்தார். உடனே, அம்பிகை, “சுவாமீ! இதென்ன அதிசயம், கொடுத்தால் யார்தான் வேண்டா மென்பார்கள்? கொடுத்தற்குச் சம்மத மில்லாவிடின் அவனை நித்திய திருப்தனெனச் சொல்லவேண்டுமோ?” என்றாள். பர்த்ருஹரியின் வைராக்கியத்தைப் பார்வதிதேவிக்குத் தெரிவிக்கவேண்டுமென்று சுவாமி திருவுளத்தெண்ணி, அம்பிகையுடன் விமானத்திலேறி பர்த்ருஹரியின் எதிரில்வந்து காட்சி கொடுத்தார். உடனே பர்த்ருஹரி பார்த்து அதி சீக்கிரத்தி லெழுந்து நமஸ்கரித்து நின்று தோத்திரஞ் செய்தார். உடனே பரமசிவன் மிகுந்த கருணையோடு “ஓ எனதன்பனே! உனக்கு யாதுவரம் வேண்

டும்" என்றருளிச்செய்தார். அதற்கு "சுவாமீ! நின்திருவருளால் யான் நித்திய திருப்தனு யிருத்தலின், நின் அனுக்கிரகமன்றி மற்றொன்றும் வேண்டுவதில்லை" என்றார். உடனே சுவாமி மீண்டும் "நான் வந்ததற்காக யாதேனும் ஓர் வரத்தைக்கேள்" என்றார். அதற்கு "சுவாமீ! நான் நிஷ்டையிலிருந்து மூன்று தினத்திற கொருமுறை யெழுந்திருந்தாற் சிறிதுமாக் கிடைக்கின்றது. அது ஏழுதினத்திற் கொருமுறை கிடைக்கும்படி செய்யவேண்டும்" என்றார். உடனே பரமேசுரன் ஓமென்றங்கீகரித்தருளினர். அப்போது ஸ்ரீ பார்வதிதேவியார் மிகவும் வெட்கத்தோடுகூட "ஹாஹா! இப்பேர்ப்பட்ட வைராக்கிய புருஷர்களும் பூலோகத்தி லிருக்கின்றார்களா?" என்று மிகவும் ஆச்சரியப்பட்டு, அவ்விடத்திருந்து புறப்பட்டு (சுவாமியும் அம்பிகையுமாக)க் கைலாசத்திற்குச் சென்றார்கள். இங்ஙனம் வைராக்கியத்திலும் ஞானத்திலும் பிரதமபுருஷனாகிய பர்த்ருஹரியானவர், நீதிசதகம், சிருங்காரசதகம், வைராக்கிய சதகம், வியாகரண மகாபாஷ்யகாரிகை முதலிய இன்னும் அநேக கிரந்தங்களை இயற்றியிருக்கின்றனர். இம் மஹானுபாவர் சிரஞ்சீவியாதலால் இப்போதும் ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தினின்றும் பன்னிரண்டு மயில் தூரத்திற்கப்பால் சூனார்க் என்னும் ஓர் கோட்டையின் குகையி லிருப்பதாகவும், சிறிது காலத்திற்குமுன் பன்னிரண்டு வருடங் காத்திருந்த ஒரு பிராமணருக்கு வரமருளியதாகவும் வதந்தி. சுபம்.

ஸ்ரீ பர்த்ருஹரியின் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

உ

ஸ்ரீமஹாகணேசாயநம:

சிவமயம்.

ஸ்ரீபர்த்ருஹரி வைராக்கிய சதகம்.

பாயிரம்.

வன்னிநாயகன் குகன்சிவை வனச்சடை விதுவார்
சென்னிநாயகன் செககுரு சிவகுறி யிராம
வின்னிஞயக னருணேவெற் பருணிதி வீர
வென்னிஞயக னிவர்பத மிறைஞ்சியேத் தெடுப்பாம்.

ஞானம தடைய வொப்பறு கரண நற்றுற வன்றிவே றிலேயென், றுனபொன் மனைக ளனைத்தையுந் துறந்தே யரன்பர மாகிய வரியின், மோனநன் னிலேயே யடைவுற யானு முன்னவன் முளரியைத் தொழுதே, தேனவ னருள்வை ராகநூ றதனைத் தெளிவுறத் தமிழினுற் றெரிப் பேன்.

நூல்.

1 - திருஷ்ணையின் றூஷணம்.

ஒருசிகை யணியாங் கவின்மதிக் கலேயி ஞெளிவிடுஞ் சிகையொளி யுடையோன், வெருசலச் சலப மதற்பொடி யாட்டால் விளைத்துயர் நசைமுனைய விர்வோன், கருவுளி லிலங்குங் கனையறுமோகக் கடுமிருள் வலிதொலேத் துணர்

வாந், திருவிளக் கரன்யோ கியருள விலத்தே திகழுவ னவனையே பணிவாம்.

(பொழிப்புரை.) சிரோபூடணமா யொளிவிடுஞ் சசிகலையைத் தரித்தொளிர்பவரும். விளையாட்டான் மன்மதனைத் தகித்தவரும், சிரேயசுதசையின் அகரபாகத்திற் பிரகாசிப்பவரும் ஞானதீபமுமாய அரன், உட்கிளம்பு மபாரமோக திமிரக்கொடுமையைக் கெடுத்து யோகியரின் உள்ள வில்லத்தே விஜயம்புரிவன் அவன் றிருவடித்தா மரையைப் பணிவாம். (1)

அளவறு கொடிய விடமமா மிடங்க ளலைந்தனை யடைபயன் சிறிதோ, வுளகுலஞ் சாதி மானமு மொழித் தே யுஞற்றினை பயன்பெறுச் சேவை, வளவினுட் பிறர்தம் வெட்கில தயின்றுய் வாயச மெனவுலோ பத்தால், வளர லென் பாவ கருமகு சகையே வாஞ்சையே மகிழ்வுறு யின்றும்.

(போ - ரை.) அளவற்ற கஷ்டதேசங்களிற் சுற்றினை, சாதி குலமொழித்துச் சேவித்தாய், காகமெனப்பிறர்மனை புகுந்துண்டனை யாதொரு பயனுமின்றி யின்னும் வளருகின்றனை ஏபாபகருமக்குறி யாய ஆசையே! நினக்கின்றுந் திருப்தியின்று? (2)

பூதல நிதியின் பதிகொடு போழ்ந்தேன் பூதரத் தாது வைப் புகைத்தேன், மோதுதெண் டிரையைக் கடந்தன னரசை முயல்வின லுவக்குமா முடித்தேன், சூதுறு மனு துற் பூசையப் பரனுய்ச் சுடலையி னிசியினைத் துலைத்தேன், போதரல் கவடியெனக்கிலை விழைவே பொருட்பெறு சிந் தையாய்ப் பவிநீ.

(போ - ரை.) ஆசையேயின்னால், பூமிக்குட் பொருளிருப்ப தாய்ப் புந்திசெய்து தோண்டினேன், மலைகளிற்றாதுக்களைப் புகைத்து இரசவாதஞ் செய்தேன், திரைகடற் கடந்தேன், அரசன் மகிழ்வுறுமாறு முயன்றேன், சுடலையில் துன்மந்திர பூசாதற்பரனுயிரவைப் போக்கினேன், பெற்றதென் பலகறையுமுண்டுகொல்! ஏதிருஷ்ணையே! இனியேனும் சபலமாய சாம்பசிவன்றாண் மலர்பரவுஞ் சிந்தையுடையையாதி. (3)

கலராலா பஞ்சகித்தே மெவ்வணமு மவர்ப்போற்றுங் கருத்து ளேம்யாஞ், செலவாங்கிப் பாட்பமுளே சூனியமா மனத்தானே சிரித்து மாவா, லுலமேவிக் கிலமான மதியரைக்கை கூப்பினே முலவா வாசாய், நலமாமென் றணையென்னே யிதனினும்வே றுற்றுவா னடிப்பிப்பாய்நீ.

(போ - ரை.) எவ்வண்ணமுந் துட்டரைப் போற்றுங் கருத்தினராயவர் திட்டுதலைச் சகித்தேம் வருங் கண்ணீரைமாற்றிச் சூனியமனத்தாற்சிரித்தேம், தனத்தாற் சடபாவத்தையடைந்த அவிவேகியர்க்கு நமஸ்காரமுஞ் செய்தேம் ஏ ஆசையே! இதனினு மென்னை யெவ்வண மாட்டிவைப்பாய். (4)

தாமரையின் றளிர்நீர்போற் றரிப்பரிதா முயிர்ப்பிதனைத் தரிப்பா னெண்ணித், தோமுறவே யொழிந்தவுணர் வினரெம்மாற் றொடங்காத தொழில தென்னே, யேமமதத் தம்பிதமா மனமுடைய தனிகரின்முன் னெதனி னானே, சேமமுறு மானமில்யா நிசகுணப்பா தகக்கதையுஞ் செய்திட் டேமால்

(போ - ரை.) தாமரையினிலை நீர்போற் சஞ்சலமான பிராணனைத் தரிப்பான் அவிவேகிபராய எம்மாற் றொடங்காத் தொழி

லென், தனமதத் தம்பித மனமுடைத் தனிகரின்முன் னெக்காரணத் தான் மானமற்றயாம் நங்குணங்கூறும் பாதகத்தையுஞ் செய்தேம் தற்புகழ்ச்சியாய பாதகமென்க. (5)

பொறுமையிற் பொறுக்கே மிலத்தின துசித புற்சுக மகிழ்வினுற் போக்கேம், பொறுவினம் பொறுவாக் குளிர் வளி யழர்சிப் பொங்கஞர் புகழ்தவம் புரியேஞ், சிறுதன மிரவும் பகலுமே நினைந்தேஞ் சிவன்பத மில்லுயிர் செயித்தே, வறிதவ்வப் பயனுன் வஞ்சியா முனிவர் வினைதரு கருமமே வினைந்தேம்.

(போ - ரை.) பொறுமையினுற் பொறுத்திலேம், கிரக சுகத்தைத்தோட திருட்டியினுல் விடுத்திலேம், சீதவாத ஆதபத்துயரைப் பொறுத்தோமன்றித் தவம்புரிந்திலேம், தனத்தியானம் செய்தனமேயன்றிப் பிராணனையடக்கிச் சிவத்தியானம் செய்திலேம், அவ்வப்பயனின்றி முனிவர்செய்கையே செய்தேம், முனிவர்க்கும் நமக்குஞ் செய்கையுந் துயரும் சமமாயும் யாமெழுங்கிற் செல்லாத தாற்பயனின்றியவாறு காண்க. (6)

போகமோ புக்தமின்ரும் புக்தமோயாமே யானேந்
தாகமாய்த் தபித்தாம்யாமே தபமதோ தப்தமின்ரு
மேகலோ காலமின்ரு மேருவம் யாமேயாசை
யாகுதல் சிதிலமின்ரு மாயினஞ் சிதிலமியாமே.

(போ-ரை.) போகங்களைப் புசித்திலேம், யாமேயவற்றி னடைவின் சிந்தையாற் பீடிக்கலுற்றேம், தாபத்திரயத்தாற் றபிப்புற்ரேமன்றித் தவம்புரிந்திலம், காலமோ செல்வதின்ரும் யாமேசெல்வம், திருஷ்ணை சிதைந்தில யாமேசிதைந்தனம். (7)

வேறு.

வலிகள்வளை வுற்றன வாண்முகத்தைப்
பலிதந்தனி ஞற்றலை பாற்சினமா
மெலிவுற்றன கைபத மேனியெலாம்
வலிதெவ்வன முற்றது வாஞ்சையரோ.

(போ - ரை.) வதனத்தைத்தோற்சுருக்குகளாற் காணலுறும் ரேகை யென்னும் வலிகளோ மூடிவிட்டன, வெண்ணரையாற் சிரம் வெண்குறிப்புற்றது, எல்லா அவயவங்களுந் தளர்ந்தன, ஆயினும் திருஷ்ணையென்னும் ஆசையானது இப்போது யௌவனத்தை யடைந்திருக்கின்றது. (8)

வேறு.

போகநசை பொன்றியதாற் புருடபகு மானமுமே பொன்றிப்போன, தேகினர்முற் பரலோக முயிர்நிகர்த்த மானமுள்ள வினியராஞே, ராகமெலத் தண்டெடூச்சி கன திமிர மறைப்புறவே யரியநோக்க, மூகமுறு மாகபகோ வென்ருலும் பயமுறுஞ்சா மோசிப்பானே.

(போ - ரை.) போகம்புசிப்பாஞற்ற லின்மையின் போகநசை நசித்தது, புருடபகுமானத்தன்மையும் போயது, தன்னுயிர் நிகர்த்த மேன்மையான உறவினரும் பரலோகஞ்சேர்ந்தார், தண்டெடூச்சி யாய்க் கண்டெரியவில்லை, என்ருலும் சரீரம் மரணமடைவா னஞ்சு கின்றது. (9)

எண்ணீர் வேட்கை மலையொலி ராக விருங்கரா விதர்க்கமார் விகங்கந், திண்ணிதைத் துரும நாசினி மோகத் திரிசுழற்கடற்பரி தறவாழ்ந், தொண்ணுயர் சிந்தைக்

கரையுறு மாசையொருகிப் பாரமே யடைந்த;தண்ணிய
விசுத்த சித்தமெய்த்தவர்க டடையறச் சகநுக ருவரால்.

(போ - ரை.) மனோரதநீரும், அடைவான் வேட்கையலையும், அபிமதவஸ்துக்களில் சிநேகமாய இராகமுதலையும், இலாபாலாப கோசரவிதர்க்கப்பறவையும் நிறைந்ததும் தைரியத்தருவைக் கெடுப்பதும் அஞ்ஞான விருத்திகளாய சுழல்களோடு கூடியதும், அதியுன்னத மாயசிந்தையாய கரைகளோடு கூடியதும் ஆய ஆசைநதியின் அக்கரையை விசுத்தமன யோகீசுரர் கடக்கின்றனர். மற்றையரிடர்ப் படுவரென்றறிக. (10)

1-வது திருஷ்ணையின் றூஷண முற்றும்.

---

2 - விடயபரித்யாக விடம்பனே.

பவத்தினிற் சரித்த சரிதையைச் சுபமாய்ப் பார்த்
தில னறப்பரிபாக, முவத்தலில் பயத்தைப் பயந்திடு நினை
யெற் குறுமகற் புண்ணியக் குவையா, லவத்தினி னெடிது
கவர்மிகு போகமவையும்புன் விஷயிக டமக்கு, வவத்தை
யே யீய மிகமிக மிகவுமாமேன லையமு மாமோ.

(போ - ரை.) சமுசாரத்தி லனுட்டித்த புண்ணியாசரணத்தை க்ஷேமகரமாய்க் கண்டிலன, புண்ணியங்களின் பயனே யெண்ணுமெனக் கச்சத்தை யுண்டுபெண்ணுகின்றது, ஏனெனின்? மகத்தாய புண்ணியக் கூட்டத்தால் வெகுகாலந் தொடங்கிச் சம்பாதித்த விஷயங்கள் விஷயிகட்கு மகத்தாய வியசனமே கொடுப்பதற்காகின்றன.

புல்லிய விடயஞ் சிரதர மிருந்தும் போகுத றிண்
ணம்போ குதலிற், புல்லிய பேத மென்னர ரிவர்லறப்

போக்கில ரென்னைகொல் சுயமே, யொல்லையிற் சுயமே வீடுமேன் மனக்கோ வுவமையி லிடர்ப்பொருட் டிவை தாம், வெல்லுறப் படுமேல் விழைவுப சமத்தின் வீழ்வி லாச் சுகம்விளைத் திடுமே.

(போ - ரை.) விடயங்கள் வெகுகாலமிருந்தும் அவசியம் செல்வனவேயாம், செல்லலிலென்ன பேதமிருக்கின்றது, எக்காரணத்தாற் புருடனேயிவற்றைவிட் டொழித்திலர், சுயமேயிவை புருடனை விடுமேல் மனத்திற் கதிகதுயரை விளைவிக்கும், புருடனிவற்றைச் சுயமாய்விடுவனேல் உபசாந்திச் சுகத்தையடைவனென்க. (12)

பெரும்பிரம ஞானவிவே கத்தானே நிமலப் பெருமதியரியற்றவுரு தியற்றுவரற் புதமே, யரும்போக வநுபவத்தே யாயதனங் களையு மாசையற வெதனுனே யற விடுவர் யாமோ, விரும்பியடைந் திலமுனமு மிவ்வுழியு மிலதாய் வேண்டுமினி மேலும்விசு வாசமுறற் கலவாந், திரும்பிநசை யதனுனே பரிக்கிரகந் தமையுந் தீர்த்துவிட வத்தியந்தஞ் சத்தியது மிலமே.

(போ - ரை.) பிரஹ்மஞானத்தாலுளதாய விவேகநிர்மல புத்தியர்கள்செய்ய முடியாததையுஞ் செய்வர், எதனுலனுபவிப்பான் எதிர்ப்போந்த தனங்களையு மத்தியந்தமாசையற விட்டொழிப்பரோ, முன்னங் கிட்டிலதா யிப்போது மடையப்பெருததா யினிமேலும டைவான் றிடவிசுவாசமற்றதாய் மனோரதமாத்திரத்தாற் சம்பாதித்த தாயதனங்களையும் விடுவான் அத்தியந்தம் வல்லமையற்றுளே மியாமென்றறிக. (13)

மலையுறு குகைக்கண் வசித்துய ரொளியை மனந்தனி னினைந்ததன் னியரின், பொலிவுறு சுகக்சட் புனற்

கண மடிமேற் புட்குல மேமற மாந்து, மலமுறு மனன மாளிகை வாபிமலர்த்தட மாடல்காக் களினூ, டலைவதி னினிமை யழுந்துறு நமக்கோ வாயுளே யறவழிந் திடு மால்.

(போ - ரை.) பர்வதக்குகைக்கண் வசித்து பரஞ்சோதியாய பிரமத்தை சதாமனத்திற் றியானிக்குந் தன்னியரின் ஆனந்தக்கண் ணீர்த் துளிகளைப் பயமற்று மடிமேலிருந்து பறவைகள் பானஞ் செய்யும்; மனோரதமேல் வீடுவாவிதடாக்கி ரீடாகானனங்களில் விளை யாடுந் தற்பரராய நமக்கோ ஆயுளத்தியந்தம் நஷ்டமாகின்றது. (14)

வேறு.

அசனம் பயிக்கஞ் சுவையிலதா மதுவுமேக வாரமதாம்
விசன தலமே யணையாகும் வேலையாட்க டனதுடலே
வசனஞ் சிதில சதசகல மயமாங் கந்தை யாமெனினும்
விசன விடய மம்மவம்ம வீடலிலதீ தென்னைகொலோ.

(போ - ரை.) புசிப்பது பிக்ஷான்னம் அதுவும் சுவையற்றதா யொருவேளை, படுக்கை தரையாம், வேலையாட்கள் தன்னுடலவய வங்களாம். வஸ்திரமோ கிழிந்த நூறுகண்ட மயமாயகந்தையாம், ஆ! ஆ!! அங்ஙனமேனும் போகவாஞ்சை விடுபடுவதின்றாம். (15)

குயமோ பிசித பிண்டமதாங் கூழின்கும்ப நிகர்க்கு மெனு, வயர்வாம் வதனஞ் சிலேற்பனவில் லதுவு மதியின் றுலியமெனக், கயமே பெருகி நனைதுளையைக் கரிநற் சிரமே கடுக்குமெனு, வியலா விகழும் வடிவமதை வியனற் கவிகள் விதந்துரைத்தார்.

(போ - ரை.) தனமோமாம்ச முடிச்சாம், கனககலசமெனவு வமிக்கப்பெற்றது, முகமோ சிலேட்மேக் கிரகமாம், அதுவும் சசாங்கனோடு வமிக்கப்பெற்றது, மூத்திரத் தானனைவுற்ற ஸ்தானத்தை யானை மத்தகத்தோடொப்பிடப் பெற்றது, சதாநிந்திக்கத்தக்க வடிவினைப் புலவர் விசேடங்கள் புகழ்ந்துளாரென்றுணர்க. (16)

காமிய ரூடவ் வுமைக்கரை யுடலீ கண்ணுதலேகனே கதிர்வோன், காமிய ரலரு டொழித்தபெண் ணுறவர் கருதெவன் றன்னின்வே றிலரால், காமன தழிவி லம்பராக் கடுவைக் கதுவிய வேனையர் கழிப்பான், காமனற் கோடும் விடயங்க ளயில்வான் கடுந்திறன் மருவுற லிலரே.

(போ - ரை.) காமியருக்குட் பார்வதிதேவிக்குப் பாதிதேகமீந்த பரமனே யுயர்ந்தவன், விரக்தருளவனை நோக்கப் பெண்ணுறவொழித்தாருமின்றும், நீக்கமுடியாத மாரனம்பாம் பாம்பின்விடம் வியாபிக்கலுற்ற மூடஜனங்களாய மற்றையர், மன்மதனு லளித்த விடயங்களைப் போகிப்பானேனுந் தியாகிப்பானேனுஞ் சமர்த்தரன்றும்.

வெம்மையை யுணரா தொருபெரும் விளக்கில் விட்டில்வீ ழுகதவக்கயலு, மம்மயில் வுறுக முட்பெறு பிசிதமறிவிலா மையி னறிந்தேயு, மெம்மனோ ரெவரு மிவணாஞர்க் குழுவே யியைந்துறுங் காமமா மிவற்றை, யம்மவோ வீட லிலமப்ன் மகிமை யாழ்ந்தமே யாமதிசயமே.

(போ - ரை.) சுடுந்தன்மையை யறியாமற் சலபமானது தீவிர தகனத்தில் வீழ்ந்தொழிக, அம்மீனமும் அறியாமற் றூண்டிலிவிட்ட மாம்சத்தை யருந்துக, யாம் அறிந்தும் ஈண்டு அளவில் ஆபத்துக்க ணிறைந்த விஷயங்களை அந்தோ விடுகிலம் மோகமகிமை மிகவு மாழ்ந்ததன்றோ. (18)

தாகமதால் வாய்காயிற் சீதமது ரச்சலத்தைத் தணிப்ப மாந்தும், ஆகுபசி யுறிற்புலா லாதிகலி நச்சாலி யன்மே யுண்ணுந், தாகமதேற் காமனழற் றையலினைத் திடதர மாய்த் தழுவாநிற்கு, மேகுபிணி மாற்றையுல கின்பெ னவே பிறழ்ச்சிமதி யெய்துமாலோ.

(போ - ரை.) தாகத்தானே முகங்காயிற் சீதமதுர நீரையருந் தும், பசித்திடின் மாம்சாதிசார்ந்த நெல்லன்னத்தை விழுங்கும், காமாக்கினி கொழுத்திடுனே அதிதிடமாய் மனைவியை யாலிங்கிக்கும், நோயின் மாற்றுயவிவற்றை யின்பெனச்சன மாறுபாடெற்ற தென்க.

உன்னத வீடொ டுணர்விளர் புகழு முயர்சுதர் சங் கையே யொழிந்து, மன்னிதி தயிதை மங்கலை வயதும் வளநவ மெனமதி யிழந்தோ, ருன்னியிவ் வுலகை யுளதெ னக் குடும்ப வொருகராக் கிரகமே புகுவர், தன்னிய ரோவவ் வகிலமுங் கணத்திற் றளருமென் றுணர்ந்தொ ழிப் பர்களால்.

(போ - ரை.) உயர்ந்த மாளிகையென்றும் சற்புருடர் மெச்சும் புத்திரரென்றும், சங்கையிலடங்கா நிதியென்றும், சல்யாணி மனை வியென்றும் தன்வயது நவமென்றும் அஞ்ஞான மூடஜனங்கள் உல கை மெய்யெனக்கருதிச் சமுசார சிறைச்சாலையை யடையாநிற்பர்; அஃதெல்லாவற்றையும் கணபங் குரமெனக்கண்டு தன்னியரோ சந் நியசிப்பர். (20)

2-வது விஷயபரித்யாக விடம்பனை முற்றும்.

3 - வது யாஞ்சாதைன்ய தூடணம்.

தீனுதீ னத்தியைந்த முகமழுகை பசிநோய் செறித ருஞ்சி ருர்களினுற் பற்றுறுசீ ரணமாம், மானுவம் பாநி ரன்ன விடரை யுறுமனேயாள் மலர்விழிப்பட் டிலளாகி லிரப்பதெய்தாப் பங்கத், தானேவந் துறுபயத்தாற் றழு தழுத்த களந்தா னுகவேசகலமிசை யக்கரமு மழிந்தே, தானேவந் தெரிந்தெழுந்த தன்சடரப் பொருட்டாய்ச் சன்மான புருடனெவ னீயெனச் சொற்றிடுமோ.

(போ - ரை.) அழுகையும் பசியும் நிறைந்து தீனுதீனமுகக் குழந்தைகளாற் பீடிக்கப்பெற்ற கிழிந்த ஆடையுடையவளும் கஞ்சி யற்றவளுமாய மனேவி கண்ணுருளேல் எந்தமானியாய புருடன்றன் றகிக்கும் வயிற்றின்பொருட்டு யாஞ்சாபங்கபயத்தாற் றழுதழுத்த கண்டத்திலுடைந்த குறைந்த அக்ஷரங்களோடு கொடுவென்று கேட் பன். (21)

வே று.

அபிமதமிக மானமென் முடியினே யவிழ்ப்பதில் வலி தாகி, தபுகுருதர குணகண மரைக்கொளிர் தண்ணிறை மதியாகி, விபுலமுற் றிலங் கிலச்சைவல் லியையறு வியன் குடா ரிகையாகும், விபுசெயற்கருஞ் சடரவிப் பிடரியும் விடம்பனஞ் செயுமாலோ.

(போ - ரை.) இஷ்டமாய மகாமானமாய முடிச்சைக் கெடுப் பதில் வல்லமையுள்ளதும், பெரும்பெரிய சற்குணக்கூட்டத் தாமரை யின் கேட்டிற்குற்ற மிகுந்தோளிராநின்ற சந்திரிகையானதும், விஸ் தாரமாய் விளங்காநின்ற லஜ்ஜைக்கொடியறுக்கும் பரசுவானதும்-

ஆயகிரப்ப வொண்ணு விவ்வயிற்றுக்குண்டாச் சட்டி யாசகானு கரணத்தைச் செய்கின்றது. (22)

நீதிகர்ப்ப விப்பிரரீ நெய்வையயுணு மனலோ னீடு புகைத் தூமிரமார் புறம்பெறுபுண் ணியமா, வீதிநகர் வனத்தேனும் வெண்படத்தான் மறைத்த வீறில்கபா லந் தரித்து வாயிருெறும் புகுந்தே, தீதுதரக் குகைநிரப்பப் பசியடைந்த மானிசெறிதரவே யுயரிதனைச் செயன்மேலா மன்றிக், கோதுறவே யனுதினமுந் தீனமுறல் சமமாங் குலமதன்ற னனந்தலையிற் குணமுடையதன்றே.

(போ - ரை.) நீதிநிறைந்த மறையோர் வேள்வியனற் புகைத் தூமிரஞ்சார்ந்த நகரவனங்களில், வெள்ளைவத்திரத்தான் மறைத்த மலினவோடு தாங்கி வாயில்தோறும் புகுந்து வயிற்றுக்குகை நிரப்பப் பசியுறுமானி யுயரிதைச்செயன்மேலா மல்லாமல் தினந்தினந் துல்லிய குலத்திற் சென்று தீனமுறல் நலமுடையதன்ரும். (23)

கங்கையின்றன் றரங்ககண சீகரத்தாற் சீதலத்தைக் கலந்து காலுந், துங்கவித்தி யாதரரா லதிட்டிதமாஞ் சிலாதலநற் றுகினன்ருன, மிங்கெவையும் பிரளயத்தை யடைந்தன வென்னெதனுனே யிப்பாருள்ளோர், பங்க முறு மானமுறும் பரபிண்ட ரமணர்களாய்ப் பதைக்கின் ருரே.

(போ - ரை.) வித்தியாதரரால திட்டிக்கப்பெற்ற கங்கையின் கல்லோலத் துளிகளாற் சீதளமாய அழகிய சிலாதலங்களாய இமவான்றன்ருனங்கள் பிரளயமடைந்தனவாவென்? எதனுல் அவமான சஹித பரபிண்டரதர்கள் மனுடர்களாய் விட்டனரோ. (24)

கந்தரங் களினென் கந்தநொந் ததுவோ கார்வரை நீர்கரந் ததுவோ, வந்தரு மதுரக் கனிகள்வற் கலைகளார் கிளை யென்கொலற் றதுவோ, முந்திரிப்பணிவு மில்கல ரனுபான் முற்றுறு சிறுதனக்கருவ, வந்துவி னடனப் புருவமாங் கொடிவாய் வதனங்க ணெதனிேனக் குவரால்.

(போ - ரை.) குகைகளினின்றும் கந்தமற்றனவா, வரையினின்று மருவிகளற்றனவா, தருக்களினின்றும் ரசசஹித பல நிறைந்ததும் வற்கலை நிறைந்ததுமாய சாகைகள் நாசமாயினவா, அத்தியந்தம் விநயசூனியராய துட்டரின், துன்பாற்பெற்ற சொற்பதன கருவபவன வயத்தானர்த் தனப்புருவலதைகளுற்ற முகங்களில் எக்காரணத்தால் விழிக்கின்றனரோ. (25)

புண்ணியமா மூலபலங் களினாலே பிரியம் பூரணமாம் விருத்தியினை யிஞ்ஞான்று புரிமின், றண்ணவமாங் கிருபணமில் பல்லவங்க டமினுற் றரையணையைச் சமைமினெழுந் திருமின்வனஞ் செலுமி, னெண்ணுசத தம்பொருணே யதனாலே பிறழ்ந்தே யிரும்விகல வாணியுறுஞ் சுத்திரரா முணர்வில், கண்ணரிய மூடமன விறைவர்களின் பெயருங் காததினுங் கேட்டிலமோ யாண்டுயிர்நேயர்களே.

(போ - ரை.) புண்ணிய மூலபலங்களாற் பிரிய பூரண விருத்தியை யிக்காற் புரிமின், அழுக்கற்ற நவபல்லவங்களாற் பூசய்யை செய்ம்மின், எழுமின் வனஞ் சென்மின், யாண்டு சந்ததம் பொருணேயால் விபரீதமுற்று விகாரவாணியையுற்ற ஐஸ்வர்ய சம்பன்ன அவிவேகமூட மனச்சுத்திரர் பெயருங் கேட்கப்படாதோ ஆண்டென்க. (26)

தன்னசை வயமே தருக்களின் கனிக டடையற வனந்தொறுங் கிடைக்கு,மின்னற நதிகடமிற்குளிர் மதுர வெழிற்புன லிடந் தொறுங் கிடைக்கு, மின்னுசு லலித லதையிலை மயமா மிருதுவூ றுறும‌ணை யுறினுங், கின்ன வன் றனிகர் முன்றிலிற் றுயரைக் கிருபணர் பொறுத்துள ரெனையோ.

(போ - ரை.) இட்டப்படித் துன்பின்றி வனந்தோறும் தருக்களின் பலம் கிட்டும், இடந்தோறும் புண்ணிய நதிகளின் சீதள மதுரநீர் கிட்டும், சுலலிதலதாபல்லவமய மெல்லணை கிட்டும், அங்ஙனமேனும் தனிகரின் வாயிலின் கிருபணர் சந்தாபத்தைச் சகிக்கின்றனர். (27)

தனபதிமுன் னிரப்பதனுற் றுயர்சார்ந்து சரிப்பரெவர் தனங்க ளாதி, யினமடைய முடிவுபே றுடையமதி யின்சிறுமை யேய்வ ரேவர், மனுமவரின் றினங்கணிட்டை முடிந்திடமன் மலைக்குகையின் பாறை யான, வினிபசய்யை மிசையிருந்துள் ளெழும்புநகை தன்னிநெடு மெண்ணற் பாற்றே.

(போ - ரை.) யாவர் தனவான் முன்னிரப்பாற் றுயருறுகின்றுரோ யாவர் போக சங்கிரக மாத்திர புந்தியரோ, அவர் தந்தினங்கள் நிட்டை முடிந்திட மலைக்குகையின் பாறையான சய்யையின் மீதிருந்து உட்கிளம்புநகைப்பொடு மெண்ணற் குரித்தாம். (28)

மகிழ்வினி னேவர் நிரந்தர முதிதர் மனுமவர்க் கபின்னமா முதித, மிகழ்தன லோப சங்குல வுளத்தரெவரவர்க் கிரிதரா திச்சை, புகன்முறை நிதிகட் டானமாய்த் தனி

னே பொருந்துபொற் புகழுறம் மேரு, புகழுய னெவர்க் காய்ப் புரிந்தனன் வாளா பொருத்தமின் றென்கருத் தி னுக்கே.

(போ - ரை.) யாவர் சந்தோடத்தா லானந்தியரோ நிரந்தர மவர்க்கா னந்தம் பிறிவின்றும், மற்றியாவர் தனலோபசங் குல வுளத்தரோ அவர்க்காசையோயா, இம்முறை நிதிகட் கிடனுய்த் தன்பாலே சமாப்தஹேம மஹிமையுடைய அம்மேருகிரியை யாவர் பொருட்டுப் பிரமாசெய்தனரோ எனக்குப் புலப்படவில்லை. (29)

தயினியமின் னிரதிசய சுகமாயெவ் விதத்துந் தணர் ந்துபயந் துன்மதமா னமற்சரமர்த் தனமாய்த், துயர்வன வித் தொம்சனமா யெவ்வுழியெஞ் ஞான்றுந் துனுமுயற்சி யின்றியதி சுலபமதே யாகி, வயவுளத்தர்க் கினியதுவாய்ப் பாவனமாய்ச் சிவற்கே வருதிருத்தி யேதுவதாய் வாரிய மற் றதுவாய்க், கயமிலதா நிதியாகும் பயிக்கவுண வென வே கருணையுள யோகிகணங் கழறியரு ளுவரால்.

(போ - ரை.) பிக்ஷான்னமானது, அதைன்யமென்றும், நிரதி சய சுகமென்றும், எவ்விதத்தும் பயமற்றதென்றும் துர்மாற்சரிய மதாபிமான மதனமென்றும், துக்கக்கூட்டவித்வம்சனமென்றும், யாண்டுமெஞ்ஞான்றும் அப்பிரயத்தின சுலபமென்றும், சாதுப் பிரியமென்றும், பவித்திரமென்றும், சம்புவின் றிருத்தி யேதுவென் றும், தடுக்கக்கூடாத தென்றும், அக்ஷயநிதி யென்றும் யோகீசுரர் புகழ்வர். (30)

3 - வது யாஞ்சாதைன்ய தூடண முற்றும்.

4 - வது போகாஸ்தைர்ய வர்ணனம்

போகமுங் குலமும் பொருளொடு மானம் பொலிவுறு நூலொடு குணமு, மாகமென் னிவற்றிற் பிணியுழி வரசா லரியதீ னதைசரையரியான், மோகவா தியராற் றீயரா னமனுன் முற்றுறு பயம்புவி நரர்க்காஞ், சோகவெவ் வியாவும் பயத்தொடு விரவுஞ் சொல்பய மில்வைராகமதே.

(போ - ரை.) போகத்தில் நோய்ப்பயம், குலத்தில் ஆசாரப் பிரம்சபயம், பொருளிலரச பயம், மானத்தில் தைன்யபயம், பலத்திற் பகைப்பயம், ரூபத்திற் சரைப்பயம், நூலில் வாதிபயம், குணத்திற் றுட்டபயம், காயத்தில் யமபயம், புவியில் நரர்க்கெல்லாவத்துவும் பயத்தோடு கூடியதாம், வைராக்யமே அபயமாகும். (31)

சனனமோ மரண பீடித மதிக சதுரயெவ் வனஞ்சரை யாலே, யினிமகிழ் வருத்த னசையினுற் சமவின் பிளையவங்க ளேமயல் களினு, னனிகுணந் தாமோ மற்சர வுலகானவனைப் புவிகள்பாம் பவற்றுன், மனவன்றுர்ச் சனராணிதியழி வதனுன் மருவுரு தெதுவெத னுனே.

(போ - ரை.) ஜன்மம் மரணத்தானும், நல்ல யெவ்வனம் சரையானும், சந்தோடந்தன ஆசையானும், உபசாந்திச்சுகம் நற்பெண்ணின் மயக்கானும், குணர்மற்சர லோகரானும், வனம் துட்டகஜசர்ப்பங்களானும், மன்னர் துர்ச்சனரானும், ஐசுவர்யம் அத்திரத்தானும் பீடிக்கப்பெறும் யாதுயாதாற் பீடிக்கப்பெருதது, ஒன்றுமின்றென்றறிக. (32)

தன்பல வாதி வியாதியின் சதத்தாற் சனங்களின் சேமம தறமான், முன்பிணே யாண்டு புகுமவண் விபத்து

மூடிய திறந்தபோன் முரணும், பின்பினு முண்டா விவசனை நியதம் பின்னொடி தன்வயங் காலன், மன்புரி தருமங் நிரங்குச விதியான் மனையெது வதுவெது திரமே.

(போ-ரை.) விவிதமாய ஆதிவியாதி சதங்களாற் சனங்களின் ஆரோக்கியங் கெடும்; லக்ஷ்மி யாண்டுபுகுமோ ஆண்டு வாயிற்றிறந்து வருவபோ லாபத்துக ளளவிறந்தனவாம்; மீண்டுமீண்டு முண்டாம் வச மற்றவரைக் காலன் அவசியம் சீக்கிரந் தன்மயமாக்குவன்; அந்நிரங் குசப் பிரமனால் நிர்ம்மிதமாய் யாதுதான் சுஸ்திரமாம். (33)

போகங்க டுங்க தரங்கபங் கமதிற் பொருதர லங்களா முயிர்ப்போ, வேகுமோர் கணத்தி லெவ்வனச் சுகச்சி ரின்மனை யிருத்தல்சின் னாளே, போகுமக் குடும்ப மசாரமே நிகிலம் புதர் கள்போ தகர்களே யுணர்ந்தே, யாகுல கருள்செய் பேசல மனத்தா லருமுயல் வுறுமினோ வுறுமின்.

(போ-ரை.) போகங்கள் துங்கதரங்கபங்கம்போற் சஞ்சலமாம்; பிராணன் கணநாசியாம்; பிரியைகள்பாலுற்ற யவ்வன சுகஸ்பூர்த்தி சொற்பதினங்களளவே; அச்சம்சாரம் நிகிலமசாரமேயென வுணர்ந்து ஏவித்வான்காள்! ஏபோதகர்காள்! உலகானுக்கிரக கோமளமனத்தான் முயலுங்கள் முயலுங்கள். (34)

காயிகள் போகங் கார்க்குழு நடுவுட் கதிர்மின லெனவலை காலு, மாயுளும் வாயு வறைமரை யிலையி லறலெனப் பங்குர மாகுந், தேயுறு மெவன லாலசை யெனவே தேர்ந்தினித் துரிதமாய்ப் புதர்கா, ளாயதை ரியச மாதியார் சுலப வரிய யோ கினின்மன மமைமின்.

(போ-ரை.) உயிர்களின்போகம் மேகக்கூட்ட மின்னலொக்கச் சஞ்சலமாம்; ஆயுளோ வாயுவசைக்குந் தாமரையிலை நீரென அழியும்;

யவ்வனமாபோகாபிலாஷை அத்திரமாம், என அறிந்து சீக்கிரம், மதிமான்களே! தைரியசமாதி சித்த சுலபயோகத்தில் புந்தியைவையுங்கள்.

ஆயுளு மலையி லழியுமெவ் வனச்சீ ராஞ்சில தினமனும் பொருள்க, டேயுள நினைவை யுறமுமின் மழையிற் றிகழ்மின லெனற்றிரள் போகம், மாயமங் கையராற் களமுறத் தழுவ மகிழ்வது நொடிபவப் பயநீ, ரேயரிப் பாரங் கடந்திடப் பிரமத் தினைந்திடு மதியரா யிருமின்.

(போ-ரை.) ஆயுள் அலையொக்கும்; யவ்வனசம்பத்துச் சொற்ப தினத்தனவே; தனுதியோ மனோரத துல்லியங்களாம்; விடயபரம்பரைகள் மழைகால மின்னொக்கும்; எப்பிரியைகளாற் கழுத்தைத்தழுவிச் செய்யுங் காடாலிங்கனம் அதுவும் நீடித்ததன்றாம்; ஆதலிற் பவபயக் கடல் கடப்பான் பிரஹ்மத்தின்கண் ஆசக்தசித்தாளாமின். (36)

வேறு.

துன்புற மலநடு நியமித தனுக்களாற் றுன்னுறுங் கருமீதி, லன்பினள் பிறிதர வுறுதுயர் விஷமமா மரியயெவ் வனபோக, மின்பெழில் விழியர்க ளிகணகைக் கிலங்கிழ மென்னலநரரேரே, வன்பவ மதுதனி லணுவுங்கிஞ் சிலுஞ்சுகம் வருமெனி னறைவீரே.

(போ-ரை.) கர்ப்பத்தின்கண் மலமத்தியில் வைக்கப்பட்ட காயத்தா லதிகவ்ஷடத்துடன் றிதிபெறும்; யவ்வனத்திற் சம்போகமும் பிரியநாயகியின் வியோகத்தால் உண்டாகுந் துன்பமும் விடமத்தோடுறும்; தருணியர் அவமானபூர்வகம் நகைத்தற்கிடனும் விருத்தாவஸ்தையும் நன்றன்று; ஹே மாநுடரே! இச்சம்சாரத்தி லணுவளவேனுஞ் சுகமிருப்பிற் சொல்லுங்கள் பார்ப்போம். (37)

வே று.

புலிப்பே டென்னச் சரைவெருவைப் புகட்டிப் பொலியு மாமயங்கண், மலப்போ ரிதனை யறுத்தமரு மருவார் பொருவ மனுமாயுட், கலைப்பா யில்லிக் குடநீர்போற் கழிந்தே யொழி தல் கண் ணுறினு, மலுப்பா மகிதந் தனைத்தினமு மகிலம் புரி யற் புதமென்னே.

(பொ-ரை.) புலியைப்போலச் சரையானது சந்ததம் பயத்தை யுண்டுபண்ணுநிற்கும்; பகைவரைப்போல் இச்சரீரத்தை நோய்களறுக் கும்; ஆயுள், துவாரம் நிறைந்த கடசலம்போற் கழிந்தொழிந்துவிடும்; இவற்றை உலகர் கண்டும் அஹிதத்தையே புரியாநின்றனரே, இஃ தென்ன விசித்திரம்! அம்ம! அம்ம!! (38)

வே று.

அழிவழிப் போகம் பகுவகைப் பிறப்பீ ததுகொடே யா யதிங் கதனுற், செழியெதற் காயிச் சுழலுகை யமையுஞ் சேட் டைக ளாலுல கீரே, விழைவெனும் பாச சதவுப சாந்தி விசத மா மனந்தனை வினழவே, யெழுவழி யாற்றன் னிடத்திருத் துமினே விருப்பிலன் பென்மொழி தனினே.

(பொ ரை.) பங்கலீலங்களாம் பகுவகைப்போகம்; அதுகொண் டே யிப்பிறப்பாம்; அதனு லீண்டெதற்காகச் சுற்றித்திரிதல்; சுற்றித் திரிதலை முற்றினும் பற்று தீர்கள்; ஹே உலகீரே! என்வசனத்தில் நுங் கட்கு அதிசிரத்தையிருப்பிற் கேண்மின்; ஆசாபாச சதவுபசாந்தத்தால் தெளிந்த மனந்தனைத் தன் சொரூபஸ்தானத்தில் நிலைபெறுத்துமின் னுசையுண்டாம்படியாற்றி; அனுராகமெழாதே னிலைபெறுதென்க. ()

வே று.

பிரமனெடு மிந்திரனே முதலனவா னவராம் பெருங்கண ங்க டமைத்திரண கணமெனவெங் கிருந்தே, திரமெனுமோ

வெதன்சுவையாற் றிரிலோக வரசா தியவிபவம் விரசமதாய்த் திகழ்வுறுமோ யாதோ, பரமவன வரதுமிளி ரொன்றதுவே யாகப் பனுபோக மிலங்கலுறு மையவருந் தவரே, புமறவே யொருகணபங் குரமான வதின்வே றுளபோகங் களிற்களிப் பை யுறுதிருமி னிருமின்.

(போ-ரை.) எவ்விடத்திருந்து பிரமனுதியரைத்திரணகணமென எண்ணுவனே, எதன் சுவையால் மூவுலக அரசாய சுகசம்பத்தானது இரசமற்றதாய் விடுமோ, யாதோவொரு சர்வோத்தம நித்யோதய சம்பன்னபோகமுண்டு அவ்வொரே பிரஹ்மானந்தரூபபோகந் துலங்குகின்றது. சாதுக்களே! அதனிதரமாய கணவிநாசபோகத்தில் பிரீதியைச் செய்யாதிருமின். (40)

4-வது போகாஸ்தைர்ய வர்ணனம் முற்றும்.

5-வது காலமகிமானு வர்ணனம்.

சவிமிகு நகரும் பெரியமன் னவனுஞ் சாமந்த வலயமு மவற்சூழ், கவிகளின் குழுவுந் தாசரு மவன்றன் கலைமதி முக வரி வையருஞ், சுவைமதி மதத்த கோமகக் குழுவுஞ் சுபம் வழுத் துனரவன் கதையென், னெவையுமி யார்வயத் தாலெண நெறியுறுமோ வெழி லக்காலனைப் பணிகுதுமே.

(போ-ரை.) அந்த இரம்மிய இராஜதானியும், அப்பெரிய மன்னவனும், அவனைச்சூழ்ந்த அவ்வரசமண்டலமும், அவன்றன் அவ்வித்வத்சபையும், அவன்றன் சந்திரபிம்பானனவச் சுந்தரிகளும், அவன்றன் அவ்வுத்தண்ட அரசகுமரவர்க்கமும், அவன்றன் அத்துதிபாடகரும், அவன்றனக்கதைகளும், ஆயவிவையாவும் எக்காலன் வயத்தால் ஸ்மரண மார்க்கத்தை யடைந்ததோ அக்காலன்பொருட்டுநமஸ்காரம்.()

எவ்விலத் தொருபோ தளவில ரிருப்ப ரிலமதி லொரு வன்பின் னிருந்து, மெவ்விலத் தொருவ னுளன்பினம் பலர்க ளிருப்பாங் கிறுதியிற் பாழா, மிவ்வகைப் புவனப் பலகையி லுழலு மின்னுயிர்க் காய்களா லாட்டிற், செவ்வெம னிருபோ திருவினைக் கோல்க ளினிதினி னுருட்டியா டிடுமே.

(போ-ரை.) எந்தவீட்டில் ஒருகாலத் தளவில்லாதவ ரிருப்பரோ அதிற்றனே மற்றொருகால் ஒருவனிருப்பன்; எவ்விடத் தொருவனே பின் பலராண்டிருப்பர்; முடிவிலாண்டு சூனியமாம்; இவ்வண்ணம் புவனப்பலகையி லுழலாநின்ற சீவக்காய்களாற் சூதாட்டிற் சிறந்த எமன் இருவினைக் கோல்களை நன்றாயுருட்டி யாடிடுவன். (42)

தினகர னுதித்துத் தினந்தினஞ் செலலாற் றேய்வுறு மாயுள்பல் செயவாங், கனகுருச் செயலாற் காலமு மறியார் கண்டுபுற் பிறப்பொடு விபத்தி, மனுசரை மரணம் பீதியு முற வின் மாசக மோகவெம் மயமா, முனுபிர மாத வெண்ணறை பருகி யுன்மத் தபூதமா யதுவே.

(போ-ரை.) சூரியன்றன் போக்குவரவால் ஆயுள்போம், மிகு காரிய பரம்பரா கனவியாபாரத்தாற் காலம்போவதுந் தெரிவதின்றாம்; சனனம், சரை, ஆபத்து, மரணம் என்னு மிவற்றைக் கண்டும் பய முண்டாகவில்லை, ஆதலிற் சகத்தானது மோகமயப் பிரமாதக் கள்ளைக் குடித்து உன்மத்தபூதமா யிருக்கின்றது. (43)

இரவொடு பகலு மீண்டது வருமே யெண்ணியு முயல் வா யறியா, ரொருவரு மறியா நெறிதொடு தொழிலை யுடை யாராய் மறித்துமத் தகைத்நாங், கிரியையால் வாளா சுழல் வுறு நிற்பர் கிளருமிவ் விதவிரும் பவத்தா, விரிபிழி வியைபா மற்புத மோக மிதுதனின் வெட்கில மெனேயோ,

(பொ-ரை.) இரவுபகல் மீண்டதுவதுவேயென வறிந்தும் மூடர் முயல்பவராய் அன்னணமே ஒருவரு மறியாதபடி பெருந்தொழிலை யுடையராய் மீண்டுமீண்டும் அத்தகைத்தாய தொழில்களால் வீணாய்ச் சுழலுவர்; இவ்வண்ணம் இச்சம்சாரத்தால் இழிவுபெற்ற யாம் அந்தோ இதனினின்றும் வெட்கத்தை யடைந்திலேம். (44)

பரசிவன் பதத்தை விதிப்படி பணியேம் பவமரி யறப்பா வுலகி, னொருதிருக் கதவந் திறப்பதில் வலிய வுயாற மெவற் றையு முளுற்றேறந், தருணியர் பருத்த வுயர்குப யுகத்தைத் தழுவிலங் கனவினும் வறிதே, யருளனை யெவன வனந்தனை யழிப்ப வமர்ந்தகோ டாலிதா னுமே.

(பொ-ரை.) சனனமரண சம்சாரம் நீங்கப் பரமசிவன் பதத்தை விதிப்படி பணிந்திலேம்; சுவர்க்கலோகத்தின் திருக்கதவு திறப்பதிற் சாமர்த்தியமுடைய உயர்ந்த தர்மமெவற்றையுஞ் செய்திலேம்; தருணி யரின் பருத்த வுயர்ந்த ஸ்தன்யந் தழுவிலங் கனவினும்; வீணாய்த் தாயா ரின் எவ்வன வனந்தனைக் கெடுக்க அமர்ந்த கோடாலிதான் யாம். ()

வேறு.

நல்லவர்கட் குரித்தாகி வாதியரின் குழுவை நறுக்குபெ ருங் கல்வியினைக் கற்றிலமா நயத்தின், புல்லுகும்ப பீடமதைப் பிளந்திடுவா னுனியாற் புகழதனைப் பாபதத்திற் புக்கவிடுக் கிலமாற், பல்லதுற நிலவெழுங்காற் சிறுமியர்கோ மளமாம் பல்லவமெல் லதாரசம் பருகியறிந் திலமால், வல்லதருணப்பரு வம் வறிதேசென் றதுவால் வதியும்பா ழாலயத்தில் விளக் கொளிபோ லந்தோ.

(பொ-ரை.) நல்லவர்கட் குரித்தானதாய் வாதியர் கூட்டத்தை நாசஞ்செய்யும் பெருங் கல்வியினைக் கற்றிலம்; பெரிய யானையின்

கும்ப பீடமதைப் பிளக்கும் வாள் நுனியாற் புகழ்ச்சியை வீரசொர்க் கத்திற்கு அனுப்பித்திலேம்; பூரண சந்திரிகையிற் பற்படும்படிக் கோமள இலைபோன்ற சுமியர் அதராசத்தைப் பருகியறிந்தோமு மில்லை; நல்ல யவ்வனப்பருவம் வீணே சென்றது பாழாலயத்தே வைத்த பெருந்தீபப் பிரகாசம்போல். (46)

வே று.

கல்வியினைக் களங்கமறக் கற்குகிலஞ் செல்வமுமே கருதிச் சேர்த்தேம், நல்வினையு மீன்றூர்க்கு நன்மனத்தா னவிற்றுகிலம் நடன நீட்சி, யல்விழிபா ரரிவையரைக் கனவதினு மணையுகில்லே மயலார் சோற்றி, னில்விழைவா லிக்காலங் காரிகளா லெனவேவ வேய்ந்த தென்னே.

(போ ரை.) கல்வியினைக் களங்கமறக் கற்றிலேம்; செல்வமும் பாடுபட்டுச் சேர்த்திலேம்; தாய்தந்தையர்க்கு நல்ல மனத்துடன் பணிவிடையுஞ் செய்திலேம்; சபலமாய் நீண்ட மைக்கண் அரிவையரைக் கனவினுங் கட்டியணையேம்; அயலார் சோற்றின்கண் ஆசையுடையரா யிக்கால்வாயசங்களாற்போற் பிரேரிக்கப்படுவதென்னே. (47)

வே று.

நாமெவர் பாலின் றுதித்தன மவர்முன் னாசமே திண்ணநண் ணினரா, ரூமெவ ரோடு நல்வளர் வுற்றேம் நண்ணின ரவருமோர் நினைவாய்த், தோமிவ ரிக்கா லனுதினம் பதனந் தொடர்வராய் மணணிறை யாற்றி, னேமுறு தீர தருக்களி னோடு மிணையவத் தையையியைந் திடுமே.

(போ-ரை.) யாம் எவரிடத்தினின்று உதித்தனமோ அவர்முன் நாசமே யடைந்துவிட்டனர்; யாம் எவரோடு வளர்ந்தோமோ அவரும் ஒரு நினைவுருவமாய்விட்டனர்; இவரோ இப்போது தினந்தினம்

அழிவை யெதிர்பார்ப்பவராய் மணல்நிறைந்த நதியின் கரை மரங்க ளோடு மிணையவத்தையை யடைவர். (48)

நாருறு மாயு ளூறள வாகு நழுவுறுந் துயிலிலே பாதி, பாவினவ் வரையி னயலொரு பாதி பாலதை கிழமையிற் கழியு, மொருவிய வழிவு பிணியிட ரோடு முறுபல சேவையா லொழி யுங், கருவரி யலையி லுழறரு வாழ்விற் காணலெவ் வணஞ்சுக முயிர்க்கே.

(பொ-ரை.) மனுடர்க்காயுள் நூறும்; பாதி துயிலிற்போம்; பாதி யிற்பாதி பாலியவிருத்தா அவஸ்தைகளிற் கழியும்; சேஷமோ புத்ராதி வியோகத்தானும் பிணியானுமுண்டாம் துன்பத்தொடுற்ற சேவாதிக ளாற் கழிகின்றது; வாரிதரங்க சஞ்சலதர ஜீவனத்திற் பிராணிகட்குச் சுகமெங்ஙனமாம். (49)

கணத்தினிற் பால னாகியே கணத்திற் காமவி ரசிகவெவ் வனாய்க், கணத்தினிற் றனத்தி னீனனாய்க் கணத்திற் கண க்கறும் விபவனாய்ச் சரையா, லுணத்துறு முடலா னடனென வலிக ளுறைதரு தனுவனாய் மனுட, னெணத்தகு குடும்ப வீற்றினிற் புகுவ னெமபுரி யிடையுடல் விடுத்தே.

(பொ-ரை.) கணத்திற் பாலனாய், கணத்திலே காமரசிகத்தருண னாய், கணத்திற் றனஹீனனாய், கணத்திலே அளவற்ற ஐஸ்வரியவா னாய், ஜரையாற் சீரணமான அங்கத்தினாற் றேற்சுருக்குகணிறைந்த உடலுடையனாய் மனுடன் நடனெனச் சம்சாராந்தத்தில் தேகத்தை விடுத்து யமபுரியடைவான். (50)

5-வது காலமகிமானு வர்ணனம் முற்றும்.

T. 6626.

6-வது யதி நிருபதி சம்வாத வர்ணனம்.

நீராசன் யாமுமருட் குருவிணையே பணிந்தே நிமலவறி வபிமான வுன்னதர்க ளாவேம், நீராதி யாற்பெருமை யுறுவை யெம திசையை நீள்புலவ ராசைகளி னீடுறுமா புரிவர், சோரா விவ் வணமான தனமதா தியினுற் சொல்பேதஞ் சேய்மையதா மிருவரா நமக்கு, மோராதெம் மிடத்துநீ புறமுகனு குதியே லுயர்யாமு மொருசிறிது மொன்றைவிழைந் திலமே.

(போ-ரை.) நீ அரசன், யாம் அருட்குருவைச் சேவித்துப் பெற்ற பிரஹ்மஞான அபிமான வுன்னதர்களாவேம்; நீ ஐசுவரியத் தாற் பெருமையுறுவை; எம்புகழ்தமைத் திசைகளி லோங்குமாறு புல வர் புரிவர்; இவ்வண்ணம்மான தனமதாதியாற் பேத மிருவர்க்கும் வெகு தூரத்ததாம்; நீ என்னை உபேக்ஷிக்கின்றே உயர்ந்த யாமும் நின்னை யுபேக்ஷித்து விடுவமென் றறிதி. (51)

இரும்பொருட்கட் கீசனீ யெனின்யாமு மருத்த மெத் துணையாம் வாணிகட்கு மீசரா யிருப்பேம், பருஞ்சூர னீயெ னினே வாதிதர்ப்ப நாக்கப் படும்படியி லக்கியமாம் பாடவ முண் டெமக்கே, பெருந்தனிகர் நினைப்பணிவ ரெனின்மதி யின் மலத்தைப் பிளந்தெறிபக் கேள்விநசை யினரெமையும் பணிவர், திருந்தெம்பா னினக்காஸ்தை யிலதேனின் பாலுந் தெளியெமக்கு மொருசிறிது மாஸ்தையிலை வேந்தே.

(போ-ரை.) பொருள்கட்கு ஈசன் நீயெனின் பொருட்சகித நூல் சட்கு ஈசன் யாமாவேம்; பெருஞ்சூர னீயெனின் வாதி தர்ப்பத்தைக் கெடுப்பதி லெமக்கும் பகுசாமர்த்தியமுண்டு; பெருந்தனிகர் உன்னைப் பணிவரெனின் மதிமலஹததின் பொருட்டுச் சிரவணேச்சுக்க ளெம்மைப் பணிவர்; எம்மிடத் துனக்குச் சிரத்தை யில்லையேல் எமக் கும் நின்பா லுபேக்ஷையே யென்றறிந்துகொள். (52)

வேறு.

மகிழ்வீண் டுறுவேம் வற்கலையான் மன்னு நீது கூலத் தான், மகிழ்வோ சமமே யாஞ்சிறப்போ மனுயிர்ச் சிறப்பா மவனுக, மிக்வு மிடிய னெவற்காசை மிளிரு மளவி லுளவுள த்தே, மகிழ்வை யுறினே தனவானுர் மருவ விலம்பா டெவன் றனக்கே.

(பொ-ரை.) யாம் வற்கலைகளாற் சந்துஷ்டர்களாவேம், நீ பட்டு வஸ்திராதியா லாவாய், இருவருக்கும் மகிழ்வொன்றே, யாதுஞ் சிறப் பின்றும், எவனுக்குத் தன ஆசை விசாலமோ அவனே தரித்திரனும், மனமானது மகிழ்வை யடைந்திருப்பின் தனவாளியாவன் தரித்திர னியாவன். (53)

பலமே சானு மயில்வதற்குப் பானங் குயிற்றற் கறல் சானு, மலமாம் பூவு மணைப்பொருட்டா யாடைப் பொருட் டாய் வற்கலையும், பொலமாம் புதிய மதுமாந்திப் பொறிக ளெவையு மயங்குகலர். நலமாம் விநய மின்மைதனை நயந்து கோடற் கெண்ணேமால்.

(பொ-ரை.) புசிப்பதற்குக் கனி போதியதாம்; மதுரநீர் பருகற் குச் சாலும்; சயனிப்பான் பூமியே போதியதாம்; வற்கலை ஆடைக் கமையும்; நவதன மதுபானத்தால் விபரீதப்பட்ட பொறிகளோடுற்ற துர்ச்சனர்களின் அனுதாரத்தை அங்கீகரிப்பான் இச்சியேம். (54)

வேறு.

அயில்வேம்பயிக் கந்தனை யாடைய தூஉம்
பயிலாசைய தாகவும் பற்றிடு வேம்
துயில்வேமகி மேலொரு துன்பமி லேம்
செயல்யாமெது சீருறு செல்வர்க ளால்.

(போ-ரை.) பிக்ஷை பிடித்துண்பேம், திக்கை யாடையா யுடுப்பேம், பூமிமேற் றுயில்வேம், துன்பமில்லாத யாம் செல்வர்களாற் செய்யற்பாலதென்? ஒன்றுமின் றென்பதாம். (55)

வே று.

நடரு மன்றுநாம் நாம்விட ரன்றுகா யகரு
மடரு மன்றவைக் கருகரி னயன்மொழி யவிர்வேம்
படரும் பொற்றனக் கனங்குனிப் பாவைப ராகே
மிடரு மன்னனைக் காண்புற விவணெவர் யாமே.

(போ-ரை.) யாம் நடரன்று, விடரன்று, பாடகரன்று, சபையுற்றுப் பேசுவருமன்று, தனபாரத்தால் வளைந்த மங்கையுமன்று; மன்னனைக் காண யாமியார். (56)

வே று.

விரிமன வீசர் முன்னிவ் விசுவத்தை விரித்தார் மற்றோர்
பரிதரல் புரிந்தார் செற்றே பார்துரும் பெனவே யீந்தார்
சரிகிலிஞ் ஞான்றுந் தீரர் சதுர்த்தசப் புவன முண்பா
ரிரிசில புரமாள் வேந்த ரிம்மதச் சுரம தென்னே.

(போ-ரை.) முன்னுதார மதியரான அரிச்சந்திராதியராய சார்வபௌமரால் தர்மாசரணத்தா லிவ்வுலகம் சம்ஸ்தாபிதமாயது; யயாதியாதியர் பரிபாலித்தார்; மாபலி முதலினோர் சயித்துத் திரணம்போல் தானஞ் செய்தனர்; இப்போது மன்னியதீரர் பதினான்கு புவனங்களையும் புசிக்கின்றனர்; சிலபுரமாள்வதிற் புருடர்க் கிம்மதச்சுரமென்? ()

வே று.

எப்புவி யரச ரீட்டினுற் கணமு மிருந்திலே யருந்திடா ததன்றன், வைப்பினு லரசர்க் குறுபுக மென்னே வண்ணத ணங்கிசாங் கிசத்துஞ், செப்பத னவய வக்கணத் தினினுஞ்

செறிசட விறையவர் செயிரை, யொப்புற விருப்ப மாறுபட் டனிச முலேமுத முறுவதென் னம்மா.

(பொ-ரை.) எப்பூமியானது அரசர் கூட்டத்தாற் கணமும் புசிக் கப்படாதிருந்ததில்லேயோ அதன் இலாபத்தான் மன்னவர்க்குப் பகு மானமென் அதனம்சத்தின் அம்சத்தினும் அதனவயவலேசத்தினும் சட அரசர்கள் துன்புறவேண்டியதிருப்ப மாருய் மகிழ்கின்றனர். ()

வே று.

சலரேகை யதனுனே வலயிதமே யாமிச் சருவமணின் பிண்டமுமோ ரணுவாகு மதையே, கலக்சுதங் களினுனே தம் பாகம் புரிந்தே காவலரின் கணமருந்து முற்றினுமா யின, கில தீன வன்னவர்க ளீவரீ கின்ருர் கேதமய லென்னேகொலா மவர்பாலி னின்றுஞ், சிலபுருட வதமரெவர் தனலேசம் விரும் பித் திரிதருவர் சீசீயிங் கவர்பிறந்த தேமே.

(பொ-ரை.) சலரேகையால் வளேவுற்ற இம்மட்பிண்டம் யாவும் ஒரு அணுவாம்; அரசக்கூட்டங்கள் யுத்தக்கூட்டத்தானே அதனேயே தத்தம் அம்சமாகச் செய்துகொண்டு புசிக்கின்றனர்; அவர் கொடுப்பர் கொடுக்கின்ருர் என்பதைவிடத் துக்கம்வேறென்; ஹீன தீன அவர்பா னின்றும் எப்புருடாதமர் தனலேசத்தை வாஞ்சிக்கின்றனரோ அவ ரைச் சீசீயெனத் தள்ளுக. (59)

வே று.

அவனிவ னேமற் றொருவனு மதன்ற னரியனு னுயர் தரு சிரத்தே, யெவனுடைச் சிதக மலங்கரப் பொருட்டா யினைந்ததோ வுயிரினேக் காக்குங், கவன் யேய்ந்து வணங் குசின் னாராற் காணுமிப் பொழுதும்வெம புருடர்க், குவமறு மெலேயி லிம்மதச் சுரத்தி னுனுகன மென்பொருட் டறியேம்.

(போ-ரை.) அவனெவனோ ஒருவன் சபலப் பிறப்பினனாவன், எவன்றன் வெண்கபாலம் அலங்காரப்பொருட்டாய் உயர்ந்த சிரத்தின் கண் மன்மத தகனனாற் றரிக்கப்பெற்றதோ, இப்பொழுது உயிர் காக்குங் கவலைமதியோடு வணங்குஞ் சில நரரால் இப்புருடர்க்கு அளவற்ற மதச்சுரபாரம் யாதின்பொருட்டோ அறியேம். (60)

6-வது யதிநிருபதி சம்வாத வர்ணனம் முற்றும்.

7-வது மனச்சம்போதன நியமனம்.

அனுதின மனியர் மனங்களைப் பலவா மாற்றினிற் பணிந் தனு ராற்கொள், ளினியருண் மனுமா றுனுதியென் மனமே யிருந்துளி னின்கணே தெளிவை, மனுதியேற் சுயமா யுதிதரு சிந்தா மணிகண விவிக்தசங் கற்ப, முனதுவாஞ் சிதத்தைப் பூரண மாக வுனுற்றுறு தென்னுரைத் திடுநீ.

(போ-ரை.) மனமே! நீ அயலார் மனங்களைக் கிலேசத்தோடும் நாநாவிதம் ஆராதித்துத் தினந்தினம் பிரசாதமடைவான் என் பிரவர்த்திக்கின்றனையோ! நீ உள்ளிற் றெளிவை யடைவையேற் றானே யுதயமாம் சிந்தாமணி கணமாய நிஷ்களங்க சங்கற்பம் நின்வாஞ்சிதத்தைப் பூரிக்கச் செய்யாதா என்? (61)

வே று.

மதியேநீ சுழலுதியென் வாளாவோ ரிடத்தினையே மருவி வாழ்வா, யெதுதானெவ் வணமாமோ வவணமஃ தியல்பாயா மிறைவே றாகா, திதமாய்ச்சென் றதைநினையா தினிவருவ தையுமெண்ணா திருந்தாக் கேயா, ததுவாய்வந் துறுபோகங் களையயில்வே னுரையின்றி யம்ம யானே.

(போ-ரை.) புத்தியே! நீயேன் வீணாய்ச் சுற்றுகின்றனை! எங்கேனும் விசிராந்தியுறுவாய்; எது எங்ஙனமாகவேண்டுமோ அதுதானே

அங்ஙனமேயாம், மாருயாகாது; சென்றதை நினையாது, வருவதையு மெண்ணுது, சிந்தியாது வந்த போகங்களை யானனுபவிப்பேன். (62)

துயர்மய மாமிப் பொறிப்புல வனத்தின் றொடர்விடு கணந்தனி னெல்லாத், துயர்துடை தொழிலில் வலியதா மோக்கத் தூநெறி தொடருதி தனதின், னுயருருத் தகைமை யடைதிநூக் குதியுன் னூர்மியொப் புறுசல கதியைக், கயபவ ரதியைச் சேவியன் மறித்துங் களிமதி தெளிதியிப் பொழுதே.

(போ-ரை.) துன்பமய இவ்விந்திரியார்த்த வனத்தினின்றும் விராமமடைதி; கணமாத்திரையில் சேஷ துன்பத்தைக் கெடுக்குந் தொழிலிற் சமர்த்தமாய சிரேயசு மார்க்கத்தை ஆசிரயி; ஸ்வரூபானுசந்தான தற்பரத்தன்மையை யடைதி; நின் அதிசபல வியாபாரத்தை யடையாதிருத்தி, மீண்டும் அசாஸ்வத சம்சாராசக்தியை யடையாதிருத்தி, இப்பொழுது பிரசன்னமா யிருத்தி. (63)

மாலெலா மொழிதி பிறைச்சிரோ மணியன் மாட்டுரு குதலினைக் கவர்தி, யேலவே மாகத் தரங்கிணித் தடத்தி னிடத்தினை யிருப்பென விசைதி, சாலவாந் தரங்க புற்புத தடித்தின் றனிவரித் திருக்களி லழலின், கோலமாஞ் சிகையொ டரவுறவினர்பாற் கொள்ளுறு மன்பெனே பயனே.

(போ-ரை.) மோகத்தை விடுதி; இளம்பிறை சூடிய எந்தையினன்பைச் சம்பாதித்திடுதி; தேவநதியின் கரையை வாசஸ்தானமாகக் கொள்ளுதி; ஏ சித்தமே! தரங்க புற்புத மின்னற்குச் சமான ஐஸ்வர்யத்தினும், சுவாலநுனி பன்னகசமான*சுகிருத்வர்க்கத்தினும், என்ன விசுவாசம் செய்யத்தக்கது? விசுவாசம் செய்யத்தகாதாமென்க. (64)

* சுகிருத் = உறவினர்.

வே று.

நிலையதிலாப் பூபாலர் புருவவிலங் தனினே நிதஞ்சுழலுந் தொழிலானே பிறழ்ச்சியளா மிந்தச், சலையையொருபொழுது மா தாத்திஞெடு நினையேற் சனிமனமே கந்தைநல கஞ்சுகமா யணிந்தே, அலைபுனல்சூழ் காசிநக ரரசநெறி களிலே யமர் பவன வாயிஞெறும் புகுந்துகர கலத்தே, நலமதொடும் வந்து விழு நற்பயிக்கந் தனையே நவிபசிசென் றொழிதிடுவா னுமும் விழைந் தனமே.

(போ-ரை.) மனமே நீ நிலையுள்ள அரசர்களின்புருவக் குடிசை யின்கண் நிதஞ்சுழலுந் தொழிலானே வியபிசாரத்தை யுடையளா மிச் செல்வியை யொருபொழுது மாதாவினேடு நினையற்க; கந்தையைச் சட்டையா யணிந்து கங்கைசூழ் காசிநக ரரசவீதிகளிலுள்ள வீடுகளின் வாயிறேறும் சென்று அஸ்தபாத்திரத்திற் பிரீதியோடும் போடும் பிக்ஷான்னத்தையே யாம் பசிநீக்கும்பொருட் டிச்சிக்கின்றேம். (65)

வே று.

தன்முனங் கீதந் தாக்கிணுத் தியராஞ் சரசவின் கவிகளீர் மருங்கே, பின்மனுங் கவுரி கவரரி வையரின் பேசுலீ லாவளை யொலியே, யென்மன விவண முளதெனி னசைஙய யிபற்றுதி பவரசச் சுவைப்பில், மன்மரு விலையேல் விரைவினில் விகற்ப மருவறு நிட்டையின் மகிணீ.

(போ-ரை.) தனக்கு முன்னர்க் கீதமும், இருபக்கத்தினும் ரசத் தோடுற்ற கவிபாடும் தக்ஷிணதேயத்துப் புலவரும், பின்னர்ச் சேடி யர்களின் சாமரைவீசுங் கைக்கங்கண சப்தமும் உளதாமே லுள்ளமே! பவரசச் சுவைப்பிலிச்சையை (சம்சாரசுகத்திலிச்சைவை); இல்லையேல் நிருவிகற்ப நிட்டையின்கண்ணே மகிழுதி. (66)

வே று.

சகல காமந் தருந்திருவைத் தனுவி னோர்கள் சாரினு மென். பகையின் முடிமேற் பாதமதைப் பதிக்கும் படியே படைத்திடினென், மிகவும் விபவங் களினாலே மிளிர்மித் திரரை மேவிடினென், பகரித் தனுத்தான் கற்பம்வரை பருத்து மிருந்தும் பயனென்னே.

(பொ-ரை.) இச்சித்ததை யெல்லாந் தருந்திருவைச் சரீரிகள் சார்ந்தாலுமென்னே, பகைவரின் சிரத்தின்கண்ணே பாதத்தை வைத்துவிடிற்றானென்னே, மிகுந்த ஐஸ்வரியங்களினாலே மித்திரர்களைச் சம்பாதித்துவிடிற்றானென்னே, இச்சரீரமானது கற்பகாலபரியந்தம் நிலைபெற்றுந்தான் பயனென்னே. (67)

வே று.

பவனிடத்திற் பத்தியினைப் பதித்திடுக மதிக்கணுள பவநா சத்தி, னிவர்பயத்தை யெண்ணுறுக வுறவினர்பா னேசமிசை யேன்மா மாரன், வெவுகருமக் குடன்படேற் கூட்டுறவின் றேடமின்றி விசன மான, நவவனங்கள் புகின்விரக்தி யுறுமிதிலென் னதிகமே னயக்கற் பாற்றே.

(பொ-ரை.) பரமேசுரனிடத்தே பத்தியைச்செய்தி; சனனமரண சம்சாரபயத்தை நினைதி, உறவினரிடத்து நேசமொழிதி; மன்மத விகாரமடையாதிருத்தி; சம்சர்க்கதோஷமின்றிச் சனமற்ற வனங்கள் புகத்தக்கனவாம்; ஆண்டோ வைராக்யம் உளது; இதற்குமேல் நமக்கென்ன இச்சிக்கத்தக்கது. (68)

ஆதலினா னனந்தமா யஜரமாய்ப் பரமாகி யமர்ந்தே யாண்டுஞ், சோதியதா மப்பிரமஞ் சிந்தனைசெ யிவ்வசத்தின் விகற்

பத்தாற் றுதைவதென்னே, யாதினனு ஷங்கிநினக் கிப்புவன வதிபதித்வ யசசு போன்ற, தீதுபயில் போகமெலா நிட்டை பெறூர்க் குடன்படலாய்ச் செறிவ வன்றே.

(போ-ரை.) ஆதலினல் நாசமற்றதாய்ச் சரையற்றதாய் மேலாய்ச் சர்வகதமாய்ச் சோதியாயிலங்கும் பிரமத்தைச் சிந்தனைசெய்தி, இவ் வசத்தின் விகற்பத்தாற் பெறுவதென்னே, பிரஹ்மத்தியானியாகிய நினக்கு இப்புவனுதிபத்திய போகங்களெல்லாம் நிட்டையடையாக் குடன்படலாய்ச் சேரப்பெறுவதல்லவா? (69)

பாதலத்திற் புகுகின்றாய் மனமேநீ நபங்கடந்து பறக்கின் ருயால், சாதமுற வட்ட திசை மண்டலங்கள் சுழலுதிசஞ் சலத்தி னூனே, மாதிரமா மான்மவித விமலமதாம் பிரமமதை மயலி னுனுந், தீதறவே யென்னேநீ சிந்தியா யெதனுனே திரவீ டுண்டாம்.

(போ-ரை.) பாதாளத்திற் செல்லுகின்றனை; மேலுலகங்களையுங் கடக்கின்றாய்; எண்டிசை மண்டலங்களுஞ் சுற்றுகின்றனை சஞ்சலத்தி னல்; நிலைபெற்றதாய்த் தனக்கினியதாம் நின்மலமாயிலங்கும் பிரமத்தை மயங்கியும் என் சிந்தியாமல் மனமே! நீ யிருக்கின்றாய்? எதனைச் சிந்தித்தான் மோக்ஷமேயுண்டாய்விடுமோ. (70)

7-வது மனச்சம்போதன நியமனம் முற்றும்.

8-வது நித்தியாநித்தியவஸ்து விசாரம்.

மறையொடு மிருதி புராணநீள் படன மகவிரி வரிய நூல் களினு, லறைதிவக் ராமக் குடில்வசி பலத வருங்கரு மத்தொ ழின் மயலா, லுறுவதென் பவதுன் பின்கன ரசனை யொழிபிர ளயவன றனது, பெறுசெயல் சுகத்தின் பதத்தையொன் றெழித்துப் பேசனவ் வணிகர்செய் பணியே.

(போ-ரை.) சுருதி ஸ்மிருதி புராண மகாவிஸ்தார சாஸ்திரங்களைப் படிப்பதினாலென்? சுவர்க்கக்கிராம குடிசையில் வாசஞ்செய்விக்கும் பயன்றருங் கர்மக்கிரியா விப்ரமத்தாலென்னே? எதை யொழித்தெனின்:—சனன துன்பபாரமெழலை யழிப்பதற்குப் பிரளயாக்கினியாய ஸ்வாத்மானந்த பதப்பிரவேசச் செய்கையொன்றை யொழித்தென்க; மற்றவையே வணிகவியாபாரம் போன்றதாம் என்றறிக. (71)

திருவுள மேரு வெதனிலுற் கடைக்காற் றீயினின் வளைந்தரு குறுமாம், பெருமிரு மகரக் கிராகமே விடமாம் பெருங்கடல் வற்றுறுந் தரணி, தரபதத் தானுந் திருதமாந் தரையே தளர்வுறுங் கரிகல பகர்ண, வொருநுனிச் சபல மொத்துறு காயத் துறுங்கதை யுரைப்பதென் னுரையே.

(போ-ரை.) சம்பத்துள்ள மகாமெருகிரியானது யுகமுடிவக்கினியாற் பீடிக்கப்பெற்று வீழ்கின்றது, மகரங்கட்கும் முதலைகட்கு மிடமாகிய பெருங்கடல் வற்றும், பெருமலை சிறுமலைகளால் நிலையாம், தரையுமழியும், எனின், யானைக்கன்றின் காதினுனியொத்த சஞ்சலக் காயத்தின் கதை யென்னே, அவசிய மழியுமென்பதி லையமின்றாமென்க. (72)

ஆகமுங் குறைந்த தருநடை தளர்ந்த தமரெயி றுதிர்ந்தன விழிவீ, றேகிய செவிட தெழுந்தது வாயி லிழிந்தது கோழையின் னுறவோ, ராகுறு மொழியா தரித்திலர் மனைவி யாற்றிலள் பணியருஞ் சுதனோ, வேகினன் பகையா யையகோ துயர மிந்நர ருறுங்கிழ வயதே.

(போ-ரை.) தேகம்வாடியது, நடைதளர்ந்தது, தந்தபந்தி சிந்தின, கண்பட்டது, காது செவிடாயது, வாயிற்கோழை யொழுகுகின்றது, உறவினர் வாக்கியத்தை ஆதரித்திலர், மனைவி சேவை செய்திலள், மகன் பகையாயினன், அந்தோ! அந்தோ! இப்புருடரின் கிழத்தகைமை துன்பத்திற்கே யிடமாம். (73)

வே று.

தலையின் மயிரின் றவளிதத்தைச் சடுதி நோக்கித் தருணியர்க ளலைசெப் சரையின் பரிபவத்தி னகம் தாயா ரோபிதமாம் [ன் வலிய வெலும்பின் சதகமுறும் வறுமைப் புருடன் றனையக்கா மிலமி லேச்சர் கூபமென மிகுதூ ரத்தே விட்டொழிவார்.

(போ-ரை.) தலைமயிரின் வெண்மையைத் தருணியர் நோக்கிச் சீக்கிரம் சரையால்வரும் அவமானஸ்தானமானதும் வெளியேதோற்று மெலும்பின் கூட்டங்களோடு கூடியதுமாய புருடசரீரத்தை மிலேச்ச ரின் கூபம்போல் மிகுதூரத்தில் விட்டொழித்துவிடுவார். (74)

வே று.

எத்துணைச் சுபமிக் காயநீ ரோக மெத்துணைத் தூரமே சரையா, மெத்துணைப் பொறிகள் வலியற விலையோ வெத்துணை யொழிந்தில தாயு, எத்துணை யேதற் குயர்வுற விதுஷ ஞன் மிக முயல்வுறல் கடனும், பத்திய பினந்தீ யிலந்தனிற் கூபம் பறித்திட முயறலெத் தகைத்தே.

(போ-ரை.) எதுவரை இத்தேகம் ரோகமின்றிச் சொஸ்தமாயிரு க்குமோ சரையணுகாதிருக்குமோ இந்திரியங்கள் சத்தியுள்ளனவா யிருக்குமோ ஆயுள் கழியாதிருக்குமோ அதற்குள் அறிஞன் தனக் குரிய நன்மையில் முயலவேண்டும்; கிரகத்தில் நெருப்புப் பற்றிக்கொ ண்டபின் கூபந்தோண்ட முயலுத லெத்தன்மைத்தாம்; ஆதலாலுட னே முயன்று முத்திக்குறுநெறியில் முந்தவேண்டு மென்பதாம். (75)

தவமதைப் புரிவ ராகிவா னதியைச் சார்ந்துவாழ்ந் திடு துமென் விநய, நவமுறக் குணவு தாரமா மனையைத் தழுவி வாழ்ந் திடுதுமென் னூலின், குவையினை யலது விவிதகா வியமீ குளிரமு திரதமாந் துதுமென், னவசில நிமிட வாயுள ரூடே யாற்றலென் னறிகில மியாமே.

(போ-ரை.) தவஞ் செய்பவராய்க் கங்கையை யடைந்து வாழ்வோமா? விநயத்தோடும் அநேக நற்குணலங்கிருத மனைவியைக் கூடி வாழ்வோமா? சாஸ்திர சமுதாயத்தினையேனும் நானாவித காவியத்தையேனும் படித்து அவைதரும் அமுதாசம் அருந்துவோமா? அற்ப நிமிஷத்தை ஆயுளாயுடைய யாம் செய்வதென்னே. (76)

வேறு.

இத்துரக சலமனமார் பூபுஜரோ வினிதேத்தற் கிசையா ராசை, மெத்தவுறு யாமுமிகு பலத்தினின்யாத் திடுமனத்தை மேவா நிற்பேந், தத்துசரை யுடலரிக்கு மேமனுமிப் பிரியவுயிர் தனையே மாய்க்கு, மொத்தநண்ப வுலகிலிருந் தவத்தை யன்றி மற்றறிஞர்க் குயர்ச்சி யாமோ.

(போ-ரை.) இந்தக் குதிரைபோற் சலமன அரசரைப் பூஜித்துப் பிரசன்ன மாக்குதல் அசாத்தியம்; பேராசையராய யாமோ அதிமகத் பலத்திற் கட்டப்பட்ட மனத்தராவேம்; சரையோ உடலைக் கெடுக்கும்; எமனும் இப்பிரிய உயிரை மாய்ப்பன்; தோழனே! பெருந்தவத்தை யல்லது அறிஞருக் குயர்ச்சி யொன்றுண்டோ. (77)

வேறு.

மானமு மாழ்கித் தனமழிந் தேற்றல் வறிதுபோ யுறவினர் மடிந்தே, பானிறை பணிய ரேகியெவ் வனமும் பையவே பாறிய பின்னஞ், சானவிப் பயத்திற் பவித்திரக் கலிமா சலமுழைத் தடக்கொடி யிலத்தோ, ரானவெவ் வாசங் கேவலமிஃதே யடையநன் மதியினர்க் குரித்தே.

(போ-ரை.) மானங்கெட்டுத் தனமழிந்து யாசகம் வீணாய் உறவினரிறந்து வேலையாட்க ளொழிந்து யவ்வனமுஞ் சென்றபின் கங்காதோயத்தாற் புனிதமாய கற்களோடுகூடிய இமாசலக் குகையிடத்துற்ற கொடிவீட்டில் வாசமியாதோ அவ்விதுவே யடைதல் நல்லறிவினர்க் குரியதாம். (78)

நிலவொளி ரமியந் திருணமார் வனத்தி னிகணடுத் தல மனோ கரமா, நல்லோரொற் றுமையி லெழுசுகம் ரமியம் நன் மனோ காமின்கா வியத்தே, சொலுகதை கோபத் துதிகணீர்த் துளிசேர் துயர்தயி தையின்முகம் ரமிய, மெலியெலா மிரமிய மனித்ததை மனத்தின் மேவுறின் மீண்டிலை சிறிதே.

(பொ-ரை.) நிலவொளி ரம்மியமாம்; புல் நிறைந்த வனத்தலம் மனோகரமாம்; சற்சங்கத்தா லெழும் சுக மிரம்மியமாம்; காவியத்தே சொல் கதை மனோகரமாம்; ஊடற்கோபத்துதித்த கண்ணீர்த்துளி சேர்ந்த துன்ப மனைவியின் வதனம் இரம்மியமாம்; எல்லா மிரம்மிய மாம்; அநித்தத்தன்மை மனத்தின்கண் மேவிடினோ பின் இவ்விடத் தெதுவு மிரம்மியமின்று மென்றுணர்க. (79)

அரமிய தலம்வாழ் வுறவிர மியமெ னன்றுகொல் கீதமே முதல, சிரவிய மலவோ வரிவைதை வராற் செனிசுக மிக மகிழ் வலவோ, சருவமுந் துறவர் மற்றுழ லளியின் சலிசிறை வளியலை தீபத், தெரிசுடர் கடுப்பச் சலமென வெணியே யேகி னர் வனநனந் தலையே.

(பொ-ரை.) மேல்வீடு வசிக்க ரம்மியமன்று, கீதமாதிய கேட்க மனோகரமன்று, பிராணசம மங்கையை அங்கையாற் காடாலிங்கனஞ் செயலாலுண்டாஞ் சுக மிகவு மகிழ்வுதாராதா, எனினும், சுழலாநின்ற வண்டின் சலிக்குஞ் சிறகால் உண்டாங் காற்றலலையுந் தீபச்சுவாலை போற் சஞ்சலமென யாவற்றையு மெண்ணித் துறவிகள் வனஞ்சென் றனர். (80)

8-வது நித்தியாநித்தியவஸ்துவிசாரம் முற்றிற்று.

9-வது சிவார்ச்சனம்.

தாதையே பழைய பவங்கொடுத் திப்பூ தரணியை யாய் ந்தாறு மெமது, காதுறு நெறியை யேனுங்கண் ணெறியைக்

கதுவவே யில்லையத் தகையன், கோதுறு விடயக் கரிணிபாற் காட கூடமா னமதவுட் காண, வாதுறுக் கரியி னிறுவலிற் சால வாடலெவ் விவன்றரிப் பவனே.

(போ-ரை.) ஐய! அனாதி சமுசார மாரம்பித்து இம் முப்புவனத்தை ஆராயும் எமது காதின் வழியையுங் கண்ணின் வழியையு மத்தன்மைய னடையவேயில்லை, எத்தன்மையனெனின்! எவ்விவன் குற்றத்தோடேற்ற விடயப் பெண்யானையின்பா லதிதிட கூடாபிமானத்தால் மதத்த சித்தயானையைக் கட்டும் விளையாட்டையவனவனே அத்தன்மையனென்க. (81)

தன்னசை யுலவ றீனமி லசனஞ் சற்சன ரோடுசக வாச, மின்னுப சமவி ரதபலத் தனதையே யியற்றனற் சிரவணம் புறத்தே, சன்னமுற் றசையு மனமுமெவ் விவைகள் சார்வுறு மிப்பரி ணமம், மன்னுமெத் தவத்தின் மகிமையோ நெடுங் கான் மனந்தனி னோர்ந்துங் கண்டிலனே.

(போ-ரை.) தன்னிச்சைப்படி சஞ்சரித்தல், அதைனிய போஜனம், சாதுசங்க சகவாசம், விஷயபோக விரக்தியே முக்கிய பலமாக வுடைய விரதம், வேதாந்த நூற்சிரவணம், பாகியத்தில் மந்தசஞ்சார மனமும் என்னுமிவைகள் எந்த மகத்தபத்தின் பரிபாகமோ அறிந்திலன் நெடுங்கால மோர்ந்தும், இவைகள் மகத்தாய தவத்தின் பயனென்பதாம். (82)

விடயவெவ் விழைவு மடிந்ததொண் மனத்தே விண்டதந் தோரவந்த விளமை, யிடாவ யவத்தே குணங்களுங் குணஞ்ஞ ரின்றிநிட் பயனதா யேகுந், திடவலிக் கமையி லெமன்கடி தடுத்தான் செய்வதென் னினியகோ தெரிந்தேன், விடமத தகன னங்கிரி யுகளம் விடுத்தயற் கதியிலென் பதுவே.

(போ-ரை.) விடய மனோரதம் அனுபவிக்கக் கிட்டாமல் மனத்தின்கண்ணேயே மடிந்தன; அவயவங்களில் அந்தயவ்வனமுஞ் சென்

றது; வித்யாவிநயாதி குணங்களும் குணங்கவர்வோ ரின்மையின் மாய்ந்தன; பலவானும் சகியாதவனுயும் காலஸ்வரூபனுயு மிராநின்ற எமனும் கிட்டிவிட்டா னுயிர்கொண்டேக; ஐந்தோ! இஞ்ஞான்று செய்யத்தக்க தென்னையோ அறிந்திலனே! ஆ! ஆ!! ஆ!!! அறிந்தேன்! அறிந்தேன்!! அறிந்தேன்!!! மதனுந்தகனுய உமாநாயகன்றன் பாதாரவிந்தத்வந்த்வங்களை விடுத்து வேறுகதி யில்லவேயில்லை; அதை யினித் தியானிப்பேன். (83)

வேறு.

உலகதி யீச னுன வுயர்மக தேவன் மாட்டு
முலகினுள் ளான்மா வான வுயர்சனுர்த் தனன்றன் பாலு
முலகுறு பொருளின் பேத வுணர்வெனக் கில்லையென் றுனு
முலகுறு நேசம் பால வுடுபதி யுடையன் பாற்றே.

(போ-ரை) சகத்திற்கு ஈசானுன மகாதேவ ரிடத்தினும், சகத்தின் அந்தரான்மாவா யிராநின்ற சனுர்த்தனனுய மகாவிஷ்ணுவினிடத்தினும், இது வேறுபொருள் இது வேறுபொருள் என்னும் பேதபுத்தியானது எனக்குக் கிஞ்சித்து மின்றும்; ஆயினும், அன்பானது இளம்பிறை யணிந்த எந்தையிடத்தேயுளது; பேதபுத்தி யில்லாவிடினும் இஷ்டதெய்வமொன்றில் அதிகபற் றிருக்கவேண்டு மென்பதாம்.

வேறு.

ஒலியெலா மொடுங்கு மொள்ளிர வுகளி லொளிமிகு நிலவினல் வெளுத்த, தலமெனு மமரர் நதியினேர் புளினந் தனிற்சுகந் தனினிருந் தினியாஞ், செலுபவப் பெருக்கின் தளர்ச்சியி னுனே சிவசிவ சிவவென வுரைத்த, வொலிபுரி யுட்சார் மிகுதரு பாட்ப வுறுவமென் றுகுலத் திசையே.

(போ-ரை.) சப்தமடங்கிய இரவுகளில் பிரகாசியாநின்ற சந்திரிகையால் வெளுத்த தலமாய கங்கையின் மணல்மேட்டில் உட்கார்ந்து

கொண்டு சம்சார விஸ்தாரத்தாற் றுக்கிதராய யாம் சிவசிவசிவ என் றாரத்த சப்தம்செய்பவராய் உள்ளடங்கிய மிகுந்த கண்ணீரால் விபாகூ லாவஸ்தையை என்று கழிப்போம். இவ்வண்ணம் கிடைப்பின் யாம் கிருதகிருத்தியராவதில் ஐயமின்று மென்றுணர்க. (85)

திருவெலா மீந்த பின்றரு ணமதாய்த் திகழ்தயை நிறை யிரு தயராய், வெருபவ மதனில் விடமமாய்ப் பிறழும் விதிகதி யதைநினை பவராய்த், தருநிறை புணிய வனநிறைந் திலகுஞ் சாற்கலை மதிக்கதி ரான, வரிவையொ டிரவை யான்பத நினை வொண் ணளியராய்க் கழிதர லென்றே.

(பொ-ரை.) அகில தனங்களையுந் தானஞ்செய்தபின் நற்றயை நிறைந்த இருதயராய்ச் சம்சாரத்தில் விஷமபரிபாகமாய தைவப்பிர விர்த்தியை ஸ்மரிப்பவராய்ப் புண்ணியாரண்யத்தில் யாம் அரன் சர ணாவிந்தத் தியானத்தையே முக்கிய ரக்ஷணமாக வுடையவராய் வியா பித்த சாற்கால சந்திர கிரணங்களோடுகூடிய இரவை என்று கழிப் பேம். (86)

காசியி லமர நதிக்கரை யிருந்தே கந்தையங் கோவண ஞகிப், பேசிரு காங்கள் சிரந்தனிற் குவித்தே பெரியமுப் புர மெரிக் களித்தோ, யேசிவ கவுரி நாயக சம்போ வெழிற்றிரி நயனவந் தருளென், றுசற வாற்றிக் கணமெனத் தினங்க ளடியனுக் ககலலென் றம்மா.

(பொ-ரை.) கந்தையைக் கோவணமாகவுடையவனுய்க் காசி மகா க்ஷேத்திரத்தில் கங்கையின் கரையிலிருந்து இருகரங்களையுஞ் சிரசிற் குவித்து, முப்புரமெரித்த முதல்வ! சிவ: உமாநாயக! சம்போ! திரிநே த்திர! என்முன் எழுந்தருளிவந்து திருவருள் செய்யவேண்டுமென்று உரக்க அழுது ஒருக்ஷணம்போல் தினங்கள் அடியேனுக்கென்று கழி

யும்; பரமேசனைச் சந்ததம் பணிகின்ற யான் நாட்கழிவதையுங் காணே னுயின் சர்வானர்த்தமும் எனக்கின்ருய்விடு மென்பதாம். (87)

கங்கையிற் படிந்து விபுநினை நற்பூ கனிகளா லருச்சித் துத தேயந், தங்குள ளாகிக் கிரிக்குகைக் கன்மஞ் சமூலத்தி லான்மாரா மனுமா, யங்கனி யுணியாய்க் குருமொழி ரதனு யரி மகன் றகனநின் னருளால், வெங்கனென் றெழிவல் சமகர சரணர் வேலையி லெழுந்துய ரந்தோ.

(பொ-ரை.) கங்கையில் ஸ்நானஞ்செய்து, விபுவாகிய தேவரீரை நல்ல பூ கனிகளாற் பூசித்துத் தியேயமாகிய தேவரீரிடத்தே யுள்ள முள்ளவனுய் மலையின் குகைப்பாறைக் கட்டின் மூலத்தில் ஆன்மாராம னுய்ப் பழம் புசிப்பவனுய் ஆசிரியர் மொழியைச் சிந்திப்பவனுய் மன் மத தகனனே! தேவரீரினருளால் அடியேன்றுல்லிய காசரணரும் மகரரேகையைப் பாதத்தி லுடையவருமாய அரசரின் சேவையா லெ ழுந்துன்பமென் றெழிவேன். (88)

வேறு.

ஒருவ னுகிவெவ் வேட்கையை யொழித்தவ னுகிப்
பெரிய சாந்தனுப்க் காதலப் பிக்கைபாத் திரனுப்ச்
சருவ வாசையி னம்பர னுகியே சம்போ
கரும நாசக சமர்த்தனுய்க் கடையமென் றடைவேன்.

(பொ-ரை.) ஒருவனுய்க் கொடிய ஆசையை யொழித்தவனுய்ப் பெரிய சாந்தனுய்க் கைத்தலத்தையே பிக்ஷைப்பாத்திரமாக வுடையவ னுப் அஷ்டதிக்கையே வஸ்திரமாகவுடையவனுய்ச் சம்புவே! கருமநாச சமர்த்தனுய்க் கடையனுய அடியனென்றுவேன். (89)

வேறு.

பாணியினைப் பயிக்கலம் பயின்றவரா யியல்பாற் பரிசுத்த பயிக்கமதாற் பற்றியநன் முதாய், வேணுமென்ற விடந்தனி

னே வீற்றருளு பவராய் விசுவமதைத் துரும்பெனவே யடிக் கடிகாண் பவராய், நாளுடலே வீடலரா பிரமகண்ட பரமா னந்தவனு பவமதனைப் புரியுமவ ராகிப், பூணுமகா யோகியருக் குமைகொழுந னருளாற் பொவிசுலப யாதோவோர் நெறிபேற வுற் றதுவே.

(போ-ரை.) கையையே பிக்ஷைப்பாத்திரமாக்கினவராய், இயல் பாகவே தூயதாய பிக்ஷையான் மகிழ்பவராய், இஷ்டமான இடங்களி லிருப்பவராய்ச், சகத்தை நிரந்தரம் துரும்பென எண்ணுபவராய்ச், சரீ ரத்தின்கண்ணேயே அகண்ட பரமானந்த அனுபவமதனைப் புரிபவரா யிராநின்ற மகாயோகியருக்கு உமாநாயகன் றிருவருளாலியாதோ ஒரு சுலபமார்க்கமல்லவோ கிடைத்துவிட்டது ஈசன்றிருவருளாலன்றி யித்தன்மை கிடைப்பதரிதென்றபடி. (90)

9-வது சிவார்ச்சனம் முற்றும்.

10-வது அவதூதசரியை.

கோவண நூறு கூறுபுற் பீறற் கொளுங்கந்தை மற்று மத் தகைத்தே, யாவலில் பயிக்க வுணவெண மிலதா மருந் துயில் வனமயா னத்தே, தாவிறன் வயனுப்த் தடையறத் திரி தல் சந்ததஞ், சிந்தைதண் மைபதா, மூவுறில் யோக மகோற் சவத் திறமை மூவுல காளலா லென்றே.

(போ-ரை.) கௌபீனமோ சதகண்ட ஜர்ஜரதரமாய கந்தையாம் (அநேகந் துவாரமுற்ற அதிஜீரணமாய கந்தைத்துணியாம்), குளிர்காற் றுத் தடுக்கவும் மீண்டு மத்தகைய கந்தையேயாம்; சிந்தையு மபே க்ஷையுமற்ற பிக்ஷான்னமே போஜனமாம்; சுடலையினேனும் வனத்தி

னேனும் நித்திரை, சுதந்திரமாய்த் தடையற்ற சஞ்சாரம், சந்ததஞ் சிந்தை சாந்தம், பிரமர்யான மகோற்சவத்தில் திரத்தன்மையுங் கிடைத்துவிடின் மூவுலகராகாட்சியாற் பயனென்னே. (91)

வேறு.

பிரம வண்டமோ மண்டலீ மாத்திரம் பிறங்கு
மொருவு லோபத்தின் பொருட்டதென் னேவுயர் தவர்கே
வருக யற்றிரி தருதலால் வாரிதி மதனந்
திரம தாயுற விலதென றெளிவதே யாமால்.

(பொ-ரை.) பிரஹ்மாண்டமோ கடாதிபோலளவுறு பரிச்சின்னமாம், தீரதவசிக்கு அது லோபத்தையுண்டாக்கக் கூடியதா என்? அன்றும்; எங்ஙனமெனின், கடலானது சிறுமீன் சுழலுதலால் கலங்குமா? நிச்சயமாய்க் கலங்காதல்லவா! (92)

வேறு.

அம்மையிலக் குமியயலோ னெவனை யேனு மடுத்திடுதி யென்கணசை யடைய வேண்டாம், விம்முவிட யத்துழல்வார் வயநின் னுவர் வேட்கையிலர்க் கென்னுவா யிந்த ஞான்றே, யம்மியைப லாசவிலைப் புடிகையான வருங்கலத்திற் பாவனமா மகங்கமொடு மிரந்த, செம்மையுறு பொருள்களினு லேயேஜீவிகையைச் செய்திடுவான் யாங்கண்மிக விழைவினையுற் றனமே.

(பொ-ரை.) இல்க்ஷ்மியம்மையே! அயலோனெவனையேனு மடைந்திடுதி, என்னிடத்தாசை யடையாதே, விஷயப்பற்றுடையவரன்றோ நின் வயமாவர், ஆசையற்றவர்க் கென்னுவாய் நீ, யாமிப்போது தைத்த பலாசவிலைப்பாத்திரத்தி லிரந்த பவித்திரமாகிய நற்பொருள்களினாலே உயிர்க்காப்புச் செய்ய இச்சையடைந்திருக்கிறோம்; ஆகையால் விரக்தர்களாய எம்பால் நீ யிருந்துதா னென்ன பிரயோஜனம்.

வே று.

மகிமகத் தணைய தாம்புய லதையே மன்பெருந் தலையணை நபமே, தருவிதா னமதா மிவ்வனு கூலத் தண்வளி விசிறி யாஞ் சாற்போ, துகைமதி தீபம் விரதியாம் வநிதை யொடு புணர்ந் துதிதரு சுகியாய்ச், சகலமா பூதி மன்னென யோகி சாந்தனுப் துயிலுவ னம்மா.

(பொ-ரை.) பூமியே மாசய்யையாம்; புஜலதையே தலையணையாம்; ஆகாசமே மேற்கட்டியாம்; அனுகூலமாய குளிர்காற்றே பங்காவாம்; சாற்காலமதியே தீபமாம்; இத்துணைச் சாமக்கிரியனாய் விரத்திப் பெண்ணொடும் புணர்ந்து சுகியாய்ச் சகலைசுவரிய சம்பன்ன சார்வ பௌம அரசனைப்போல் மகாயோகி சாந்தனாய்த் துயில்வன். (94)

வே று.

ஐயமயில் பவனாகிச் சனநாப்பண் மருவ லாகிலனாய்த் தன் வயசேட் டயனாகிச் சததங், கையுறல்வீ டவின்விரக்த நெறி யையுறு பவனாய்க் கதிமறுகி லெறிகிழிந்த பழையவுடை யின னாய், மையலற வுற்றகந்தை யாசனனாய் மான மதவகங்கா ரந் தணந்த வல்லவனாய்ச் சமமாஞ், செய்யசுக வதிசயத்தே யழுந் தும்விழை வுள்ளனாய்ச் சிறந்தவொரு வருந்தவனு நிகழ்ந்திடுவ னன்றே.

(பொ-ரை.) பிக்ஷையெடுத் துண்பவனாய்ச், ஜனமத்தியிற் செல் லாதவனாய்த், தனக்கிஷ்டமான தொழிலோடு மிஷ்டமான சஞ்சார முடையவனாய், தள்ளுத லொன்றைக் கொள்ளுதலின்றி நிரந்தரம் வைராக்யமார்க்க முற்றவனாய், வழியிற்கிடக்கும் கிழிந்தபழைய ஜீரண மான வஸ்திரத்தையுடையவனாய்ப், பழைய கந்தையையே ஆசனமாக வுடையவனாய், மானம் மதம் அகங்கார மற்றவனாய், உபசாந்திச் சுகத்

திலேயே கட்டுப்பட்ட மனத்தையுடையவனாய் ஒரு அருந்தவன் கம்பீரமாய் வீற்றிருப்பன். (95)

சண்டாள னென்னிவனற் றவிசாதி யலது சதுர்த்தனோ அரும்பெரிய தாபசனோ வலதென், றண்டாத தத்துவபாய் தற்பரபுந் தியனோ தக்கவெவ னேனுமொரு யோகவிறை யோவென், விண்டாறே யுதிவிகற்ப சற்பவா சால வீணர்களான் மறுகதனில் வினவுறினுஞ் சினமே, மண்டாாய் மகிழ்வைமனு மனருமில ராயே மவுனமதா யோகபார் சென்றுமறு விலரே.

(பொ-ரை.) சண்டாளனோ, இவன் பிராஹ்மணனோ, சூத்திரனோ, அல்லதென் தத்துவ ஆராய்ச்சி செய்யும் புத்திமானோ, அல்லதேதேனுமோர் மகாயோகீசுவரனோ, அல்லதென் பெருந்தபசியோ, என நினைத்தவண்ணம் பேசும் மூடவாயாடிச் சனங்களால் ஏசுறினும் வீதியில், கோபமும் மகிழ்ச்சியையு மடையாதவராய் மவுனமுடையராய் யோகிகள் செல்வர். (96)

வே று.

வாதையின் முயல்வற் றடைதரு மசனம் வனசனால் வாயுகற் பிதமாங், காதர வுகளுக் கிளம்புலே மேய்ந்து களிப்புறும் பசுக்கள்பூத துயின்றே, கோதுறு குடும்பக் கடல்கடக் காற்றல் கொளுமதி நரர்க்கச்சீ வனத்தை, மோதின ன தனைக் கோலுவர்க் கனிச முழுக்குண முடிவினை யுறுமால்.

(பொ-ரை.) ஹிம்சையும் யத்தனமுமின்றி யெய்தும் போஜனம் வாயுவாய்ப் பிரமனாற் கற்பிக்கப்பெற்றது சர்ப்பங்கட்டு; இளம்புன் முதலிய மேய்ந்து,பசுமுதலியன பூமியிற் றுயிலாநிற்கும்; சம்சார சாகரத்தைத் தாண்டு மாற்றலுடைய நரர்க்கொரு சீவனத்தை வைத்தார்; அதைத் தேடுவதிலேயே தங்கள் குணங்களை முடிவுசெய்து பரமனையும் மறந்து அலைகின்றனர். (97)

கங்கையின் றீர விமகிரிச் சிலேயிற் கட்டுறு பதுமவா தன ஞய், மங்கலச் சிவத்யா னம்பயின் முறையாள் மருவிய யோக வின் றுயிலே, யங்கெனக் கென்னே யச்சுப தினத்தா லாவ ேதா வறக்கிழ வரிணஞ், சங்கையற் றெனது வங்கமேற் றனது சடலம துராய்தல்யாண் டாமோ.

(பொ-ரை.) கங்கையின் றீரத்திலிருக்கும் இமாசலப் பாறையில் பத்தபத்மாசனத்தோடு கூடியவனுய்ப் பிரஹ்மத்யான அப்பியாச விதி யால் யோக நித்திரையை யடைந்தவனுய எனக்கு அந்தப் புண்ணிய தினங்களாற் பலிக்கத்தக்கதென்? யாண்டு அந்தக் கிழமான்கள் பயமற் றனவாய்த் தங்கள் சரீரத்தை என் சரீரத்தில் அரிப்பு நீங்கும்பொருட் டுத் தேய்த்துக்கொண்டிருக்குமோ, அத்தகைய சீவகாருணியாதி நிறை ந்த பிரஹ்மத்தியானமே வேண்டற்பாலதாம். (98)

புனிதகைக் கலமுந் திரிந்துறு மயிக்கப் பொன்றலி லசன முந் தசதிக், கெனுமக லுடையுஞ் சபலமி லனற்ப விரும்புவித் தற்பமு மெவர்க்கே, மனசங்க வங்கீ கரணபக் குவமா மன மகிழ் வர்கடன் னியராய்க், கனதயி னியத்தி னிடர்ப்பெருக் கொழித்தே கருமநின் மூலனம் புரிவார்.

(பொ-ரை.) பவித்திரமாகிய கைத்தலப்பாத்திரமும், சுற்றிச் சுற்றி யெடுத்த அக்ஷயபிக்ஷான்னமும், பத்துத்திசையாய விஸ்தாரவஸ் திரமும், பூமியாய பெரிய அசஞ்சல சய்யையும், எவர்கட்குச் சங்கரஹித அங்கீகாரத்தாற் பரிபக்குவமான மனமோ அம்மனத்தான் மகிழ் வுடையாராய அவர் தன்னியராய்த் தைனியதுக்க மற்றவராய்க் கர்மங் களை நாசஞ்செய்வர். (99)

வேறு.

மேதினியென் மாதாவே மாருதமாந் தந்தாய் மித்திரனுந் தேஜசுவே யறலெனுநல் லுறவே, யோதுநப வுடன்பிறப்பே

யுங்களுக்கு முடிவா யுறுபிரண மாஞ்சலியை யுஞற்றுவனே யாகிப், பாதவுங்கள் சங்கவசத் துற்பனபாக் கியத்தாற் பாவ விலங் கமலமாம் ஞானமத னுனே, காதியொழி சருவமகா மோகமகி மையன்யான் கவலையறப் பரப்பிரமத் திற்கலக்கின் றனனே.

(பொ-ரை.) மேதினியாய என்றாயே! காற்றாய தந்தையே! சிநேகனுய தேயுவே! நல்ல உறவாய ஜலமே! ஆகாயமாய சகோதா னே! உங்களுக்குக் கடைசியாய் நமஸ்காரம் புரிபவனாய் உங்கள் சங்க வசத்தாலுண்டாய பாக்கியத்தால் எங்குமிலங்கும் நிர்மல ஞானத்தால் கெடுக்கப்பட்ட சர்வமோக மகிமையுடையவனுய யான் கவலையின்றிப் பரப்பிரஹ்மத்திற் கலக்கின்றேன். (100)

ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்ய சதகம் முற்றும்.

பொற்புறு வீரசே கான்றன் பூங்கழற்
கற்புறு மடியனே னுற்றிம் மாலையை
யெற்புறு களந்தனி னிசைவிப் பேனொரீஇ
மற்பெறு மனந்தனை மறக்கும் வாஞ்சையே.

வன்னிமாநகரில் வைகுந் தேவர்கள் வாழ்க வாழ்க
வன்னிமாநகரில் வைகுங் குரவர்கள் வாழ்க வாழ்க
வன்னிமாநகரில் வைகு மடியார்கள் வாழ்க வாழ்க
வன்னிமாநகரில் வைகு மியாவரும் வாழ்க மாதோ.

உ

சிவமயம்.

ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்கியசதகத்தின்

அரும்பதவுரை.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(1)	சிகை	=	தலை.
	திருஷ்ணை	=	ஆசை.
	தூஷணம்	=	தோஷங்கூறல்.
	கவின்	=	அழகு.
	வெரு	=	பயம்.
	சலபம்	=	விட்டிற்பூச்சி.
	அவிர்வோன்	=	விளங்குவோன்.
	இலம்	=	வீடு (இல்லமென்பது இடைகுறைந்து இலமென்றாயிற்று).
	பூடணம்	=	ஆபரணம்.
	அக்ரபாகம்	=	முற்பாகம்.
	மதன்	=	மன்மதன்.
(2)	வளவினுள்	=	கிரகத்தினுள்.
	அயின்றாய்	=	புஜித்தாய்.
	வாயசம்	=	காகம்.
	சூசகை	=	குறிப்பு.
	வாஞ்சை	=	ஆசை.

கவிநெம்பர்.	பதம்.	பொருள்.
(3)	பொழ்ங்தேன்	= தோண்டினேன்.
	பூதரத்தாது	= பர்வதத்திலுள்ள தாது.
	தெண்டிரை	= சமுத்திரம்.
	நிசி	= இரவு.
(4)	கலர்	= துஷ்டர்.
	ஆலாபம்	= வைதல்.
	மாவால்	= தனத்தால்.
	உலமேவி	= இறுமாப்படைந்து.
	கிலம்	= கெடுதி.
	உலவா	= கெடாத.
(5)	ஏமம்	= பொன்.
	தம்பிதம்	= ஜடபாவம்.
	நிஜகுணம்	= தன்னுடைய வித்யாவிநயாதிகுணம்.
(6)	பொங்கஞர்	= மிகுதியாகிய துக்கம்.
	உயிர் ஜயித்து	= பிராணநிரோதஞ் செய்து.
(7)	புக்தம்	= அனுபவம்.
	தப்தம்	= செய்தல்.
	சிதிலம்	= நாசம்.
(8)	பலிதம்	= வெண்மையாகிய நரை.
	கைபதமேனி	= கை, கால், சரீரம்.
(9)	தண்டெழுச்சி	= தடியூன்றியெழுதல்.
	சாமோசிப்பான்	= மரணத்தாற் சரீரத்தை விடும்பொருட்டு.
(10)	கரா	= முதலை.
	விகங்கம்	= பக்ஷி.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
	விடயபரித்தியாக விடம்பனை	=	விஷயங்களை விடுவதைப்பற்றிக் கூறும் ஆடம்பரம்.
(11)	பவத்தினில்	=	சமுசாரத்தில்.
	அவத்தினில்	=	வியர்த்தமாக.
(12)	சிரதரம்	=	அநேககாலம்.
	இடர்ப்பொருட்டு	=	துக்கத்தின்பொருட்டு.
	விழைவு	=	ஆசை.
(13)	பரிக்கிரகம்	=	கொள்ளுதல்.
(14)	புனற்கணம்	=	ஜலத்துளி.
	மனனமாளிகை	=	மனோராச்சியத்தாற் கற்பிக்கப்பட்ட பெரியவீடு.
	வாபி	=	நடைகிணறு.
	மலர்த்தடம்	=	தாமரைப்பொய்கை.
	ஆடல்கா	=	உத்யானவனம் (விளையாடுவதற்குரிய சோலை).
(15)	வசனம்	=	வஸ்திரம்
	சதகலம்	=	நூறுகண்டம்.
(16)	சூழின்கும்பம்	=	பொற்குடம்.
	வதனம்	=	முகம்.
	சசாங்கன்	=	சந்திரன்.
(17)	கண்ணுதல்	=	பரமசிவம்.
	கதிர்வோன்	=	விளங்குவோன்.
	அம்பராக்கடு	=	அம்பாகிய சர்ப்பத்தின் விஷம்.
(18)	தவக்கயலும்	=	தவ்விச்செல்லாநின்ற அம்மீனமும்
	பிசிதம்	=	மாம்சம்.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
	அம்மயில்வுறுக	=	நன்றாகப் புஜிக்துக.
	அஞர்	=	துக்கம்.
(19)	கலிதம்	=	சேர்க்கப்பட்ட (கூடிய).
	சாலியன்னம்	=	நெற்சோறு.
(20)	உணர்வினர்புகழும்	=	சத்துக்களாற் புகழானின்ற.
	தயிலை	=	(மனைவி).
	நவம்	=	புதிது (நவமென்றது வயதினிளமை யைக் காட்டும்பொருட்டு).
	காராக்கிரகம்	=	சிறைச்சாலை.
	கணபங்குரம்	=	க்ஷணத்தில் நாசமாவது.
	யாஞ்சாதைன்ய தூஷணம்	=	யாசகத்தா லிரங்கலைத் தூஷித்தல்.
(21)	தீனுதீனம்	=	இரக்கத்தின் வயப்படல்.
	சிறார்	=	சிறுவர்.
	அம்பரம்	=	வஸ்திரம்.
(22)	குருதரம்	=	சிரேஷ்டம்.
	கணம்	=	கூட்டம்.
	மரைக்கு	=	தாமரைக்கு.
	மதி	=	சந்திரன்.
	விபுலம்	=	விஸ்தாரம், விசாலம்.
	லச்சாவல்லி	=	நாணமாகியகொடி.
	குடாரிகை	=	கோடாலி.
	சடரம்	=	வயிறு.
	பிடரி	=	பாத்திரம்.

கவிநெம்பர்.	பதம்.	பொருள்.
(23)	நீதிகர்ப்பவிப்பிரரீ	= பூர்வமீமாஞ்சையிற் கூறியபடி யொழுகும் பிராமணரால் ஈயப்பட்ட (ஆகுதி செய்யப்பட்ட).
	தூமிரம்	= கருமையும் பொன்மையுஞ் சேர்ந்த நிறம்.
(24)	துங்கம்	= பரிசுத்தம்.
	அதிட்டிதமாய்	= நிலைப்படுத்தப்பட்டதாய்.
	கல்லோலம்	= அலை.
(25)	கந்தரம்	= குகை.
	கந்தம்	= கிழங்கு.
	வற்சலை	= மரவுரி
	விநயம்	= வணக்கம்.
	லதை	= கொடி.
(26)	கிருபணம்	= தோஷம் (குற்றம்).
	பல்லவம்	= தளிர்.
	விகலவாணி	= பிதற்றுமொழி.
	சுத்திரர்	= அற்பர்.
	பூசய்யை	= பூமியாகிய படுக்கை.
(27)	சுலலிதலதை	= மனோகரமாகிய கொடி.
	ஊறு	= பரிசம்.
	கின்னவன்றனிகர்	= குன்றுற்ற மிகுந்த ஐசுவரியவான்கள்.
	கிருபணர்	= லோபிகள்.
	சந்தாபம்	= துக்கம்.
(28)	வெளிப்படை.	

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(29)	நிரந்தரம்	=	எப்போதும்.
	முதிதர்	=	சந்தோஷமனத்தர்.
	சங்குலவுளத்தர்	=	பின்னியமனமுடையவர்.
(30)	மர்த்தனம்	=	நாசஞ்செய்வது.
	பாவனம்	=	பரிசுத்தம்.
	வாரியமற்றது	=	தடுப்பரிது.
	கயம்	=	நாசம்.
	போகாஸ்தைரிய வர்ணனம்	}	போகத்தின் நிலையற்றதாந் தன்மையை வர்ணித்தல்.
(31)	அரி	=	சத்துரு.
	ஆசாரப்பிரம்சம்	=	ஆசாரத்தினின்றும் வழுவுதல்.
	அபயம்	=	பயமற்றது.
(32)	அங்கனை	=	ஸ்திரீ.
(33)	நியதம்	=	அவசியம்.
	விவசரை	=	வசமற்றவரை.
	ஆதி	=	மனோதுக்கம்.
	வியாதி	=	சரீரதுக்கம்.
	விவிதம்	=	நானாவிதம்.
	சுஸ்திரம்	=	நந்நிலைபெற்றிருத்தல்.
(34)	துங்கம்	=	பரிசுத்தம், உயர்ச்சி.
	தரங்கம்	=	அலை.
	பங்கம்	=	நாசம்.
	தரலம்	=	சஞ்சலம்.
	அசாரம்	=	சாரமற்றது.
	நிகிலம்	=	யாவும்.
	பேசலமனம்	=	இரக்கமுடைய மனம்.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(35)	காயிகள்	=	சரீரிகள் (ஜீவர்கள்).
	கார்க்குழு	=	மேகக்கூட்டம்.
	பங்குரமாகும்	=	நாசமாகும்.
	லாலசை	=	வாஞ்சை.
(36)	களம்	=	கழுத்து.
	துல்லியம்	=	சமானம்.
	ஆசக்தசித்தர்கள்	=	பிரியமுடையமனத்தர்.
(37)	தனு	=	சரீரம்.
	விஷயம்	=	ஏற்றத்தாழ்வு.
	ரேரே	=	அடே! அடே!! (இது நீச சம்போதனம்.
	கிஞ்சிலும்	=	அற்பமும்.
(38)	புலிப்பேடு	=	பெண்புலி.
	ஆமயம்	=	ரோகம் (நோய்).
(39)	விசதம்	=	நின்மலம்.
	பகுவகை	=	அநேகவகை.
(40)	விரசம்	=	ரசமற்றது.
	அனவரதம்	=	ஸதாகாலம்.
	கணவிஞசி	=	அதிசீக்கிரத்தில் நாசமாவது.
	காலமகிமானு வர்ணனம்	=	காலனுடைய மகிமையை வர்ணித்தல்.
(41)	சவி	=	அழகு.
	சாமந்தம்	=	சிற்றரசு.
(42)	வெளிப்படை.		

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(43)	தினகரன்	=	சூரியன்.
	குருசெயல்	=	மிகுதியான செய்கை.
	விபத்தி	=	ஆபத்து.
	பீதி	=	பயம்.
	வெண்ணறை	=	வெண்ணிறமாகிய கள்.
	உன்மத்தம்	=	ஒன்றையுந்தெரியாமல்மதமோடிருத்தல்.
(44)	வெளிப்படை.		
(45)	பரவுலகு	=	சுவர்க்கலோகம்.
	உஞற்றேம்	=	செய்யேம்.
	யுகம்	=	இரண்டு.
	வறிதே	=	வீணாக,
(46)	நறுக்கு	=	கெடுக்கானின்ற.
	கயத்தின்	=	யானையின்.
	பாழாலயம்	=	பாழ்ங்கோயில்.
(47)	அரிவையர்	=	ஸ்திரீகள்.
	காரிகள்	=	காகங்கள்.
(48)	பதனம்	=	நாசம்.
	தருக்கள்	=	விருக்ஷங்கள்.
(49)	பாலதை	=	சிசுத்தன்மை (குழந்தைப்பருவம்).
	கிழமை	=	விருத்தப்பருவம்.
(50)	காமவிரசிகன்	=	காமத்தின் மூழ்கினோன்.
	விபவன்	=	ஐசுவரியவான்.
	தனு	=	சரீரம்.
	ஈற்றினில்	=	முடிவில்.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(51)	யதி	=	சன்யாசி.
	நிருபதி	=	அரசன்.
	சம்வாதம்	=	சம்பாஷணம் (பேசுதல்).
	ராதி	=	தனம்.
	ஆசை	=	திசை.
(52)	வாணி	=	வாக்கு.
	வாதிதர்ப்பம்	=	வாதிகளின் மதம்.
	பாடவம்	=	சாமர்த்தியம்.
	ஆஸ்தை	=	ஆதரவு (அன்பு).
(53)	துகூலம்	=	வஸ்திரம்.
	இலம்பாடு	=	தரித்திரம்.
(54)	பலம்	=	பழம்.
	அயில்வதற்கு	=	புசிப்பதற்கு.
	அறல்	=	ஜலம்.
	கலர்	=	துஷ்டர்.
	விநயம்	=	வணக்கம்
	நவதனம்	=	புதிதாகிய தனம்.
(55)	பயிக்கம்	=	பிக்ஷான்னம்.
	மகி	=	பூமி.
(56)	நடர்	=	நாட்டியம் செய்பவர்.
	விடர்	=	விஷயாசக்தர்.
	காயகர்	=	பாடுவோர்.
	அவைக்கு	=	சபைக்கு.
	அருகர்	=	யோக்கியர்.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(57)	சதுர்த்தசபுவனம்	=	பதினான்குலகம்.
	புரம்	=	பட்டணம்.
	மதச்சுரம்	=	மதமாகிய சுரநோய்.
	ஸம்ஸ்தாபிதம்	=	நன்றாக நிலைநிறுத்தப்பட்டது.
	யயாதி	=	சந்திரவம்சத்திலுள்ள ஓரரசன்.
(58)	ஈட்டதால்	=	கூட்டத்தால்.
	செயிர்	=	துன்பம்.
(59)	வலயிதம்	=	சுற்றப்பட்டது.
	காவலர்	=	அரசர்.
	அதமர்	=	கீழ்ப்பட்டோர்.
(60)	மதனறனரி	=	மன்மதனுடையசத்துரு(பரமசிவன்).
	சிதகம்	=	வெண்மையாகிய தலையோடு.
	சம்போதனம்	=	விளி.
	நியமனம்	=	நியமித்தல்.
(61)	சிந்தாமணி	=	சிந்தித்ததைக் கொடுக்கப்பட்டமணி.
	விவிக்தசங்கற்பம்	=	நானாவிதமாகிய சங்கற்பம்.
(62)	வெளிப்படை.		
(63)	ஊர்மி	=	அலை.
	கயபவாதி	=	நாசமாகநின்ற சமுசாரத்திலுள்ள இன்பம்.
(64)	பிறைச்சிரோ மணியன்	=	சந்திரனைச்சிரத்தில்மணியாக அணிந்த பரமசிவன்.
	மாகதரங்கிணி	=	தேவநதி (கங்கை).
	தடித்தின்வரி	=	மின்னல்.

கவிநெம்பர்.	பதம்.	பொருள்.
(65)	பூபாலா	= அரசர்.
	புருவவிலம்	= புருவமாகிய குடிசை.
	சலை	= சஞ்சலை, வியபிசாரி (ஈண்டு லக்ஷிமியைக் கொள்ளத்தக்கது).
	கஞ்சுகம்	= சட்டை.
	பவனம்	= வீடு.
	அஸ்தம்	= கை.
(66)	தாக்கிணத்தியர்	= தக்ஷிணதேசத்திலுள்ளவர்.
	விகற்பமருவலும் நிட்டை	= நிர்விகற்ப சமாதி.
(67)	மித்திரர்	= சிநேகிதர்.
(68)	மாரன்	= மன்மதன்.
(69)	அஜரம்	= ஜரையற்றது.
	அனுஷங்கி	= சம்பந்தி.
	யசசு	= கீர்த்தி.
(70)	நபம்	= ஆகாசம்.
(71)	திவக்ராமம்	= தேவநகரம்.
	பலதம்	= பலத்தைக் கொடுப்பது.
	விப்ரமம்	= மயக்கம் (விசேஷமாகிய பிரமம்).
(72)	திருவுளமேரு	= ஐசுவரியம் நிறைந்த மேருமலை.
	கிராகம்	= முதலை.
	மகரம்	= திமிங்கலம்.
	தாணிதரம்	= பர்வதம்.
	கரிகலபகர்ணம்	= யானைக்கன்றின் காது.
	திருதம்	= நிச்சலம்.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(73)	எயிறு	=	பல்.
(74)	தவளிதம்	=	வெண்மை.
	சடுதி	=	சீக்கிரம்.
	பரிபவம்	=	அவமானம்.
	மிலேச்சர்	=	சண்டாளர்.
(75)	விதுரன்	=	வித்வான் (அறிஞன்).
	கூபம்	=	கிணறு.
(76)	வெளிப்படை.		
(77)	துரகம்	=	குதிரை.
	பூபுஜர்	=	அரசர்.
(78)	ஜானவிப்பயம்	=	கங்காஜலம்.
	இமாசலம்	=	ஹிமவத்பர்வதம்.
	தோயம்	=	ஜலம்.
(79)	வெளிப்படை.		
(80)	சிரவியம்	=	கேட்கத்தகுந்தது.
	தைவரல்	=	தழுவுதல்.
	துறவர்	=	யதிகள்.
	அளி	=	வண்டு.
	கடுப்ப	=	சமானமாக.
	நணந்தலை	=	நடு (மத்தி).
(81)	கரிணி	=	பெண்யானை.
	ஆதுரம்	=	பீடிக்கப்பட்டது.
(82)	சகவாசம்	=	ஒற்றித்திருத்தல்.
	உபசமவிரதபலம்	=	விஷயபோகத்திலுள்ள வைராக்கியமாகிய பலம்.

கவிநெம்பர்.	பதம்.	பொருள்.
(83)	விண்டது	= நாசமாயது.
	அகோ	= ஆச்சரியம்.
	மததகனன்	= மன்மததகனன் (பரமசிவன்).
	அங்கிரியுகளம்	= இரண்டுபாதம்.
(84)	பாலவுடுபதி	= பாலசந்திரன்.
	உடு	= நக்ஷத்திரம்.
(85)	புளினம்	= மணல்.
	ஆகுலம்	= பயம் (துக்கம்).
(86)	வெளிப்படை.	
(87)	வெளிப்படை.	
(88)	தேயம்	= தியானிக்கப்பட்ட வஸ்து.
	கன்மஞ்சம்	= கல்லாகிய கட்டில்.
	அரிமகன்	= விஷ்ணுவின் புத்திரன் (மன்மதன்).
	சமகரசரணம்	= சமமாகிய கை காலையுடைய (இதர) ஜனங்கள், அல்லது மகாரோகையைக் காலிலுடைய தனிகர்.
(89)	வெளிப்படை.	
(90)	வெளிப்படை.	
(91)	வெளிப்படை.	
(92)	மண்டலீ	= பிம்பம்.
	கயல்	= மீன்.
	வாரிதி	= சமுத்திரம்.
(93)	பலாசவிலை	= பலாசமென்னும் ஓர் விருக்ஷத்தின் இலை.
	புடிகை	= தொன்னை.

கவிநெம்பர்.	பதம்.		பொருள்.
(94)	புயலதை	=	புஜமாகிய கொடி.
	மன்னென	=	அரசனைப்போல்.
(95)	நாப்பண்	=	நடு.
(96)	சதுர்த்தன்	=	சூத்திரன்.
	தாபசன்	=	தபசையுடையவன்.
	தண்டாத	=	நீங்காத.
	மறுகு	=	தெரு.
(97)	வனசன்	=	பிரமன்.
	கோலுவர்	=	தேடுவர்.
	அனிசம்	=	மிருகி.
(98)	அரிணம்	=	மான்.
(99)	தசதிக்கு	=	பத்துத்திசை.
	நின்மூலனம்	=	நாசம்.
	மேதினி	=	பூமி.
(100)	மாருதம்	=	காற்று.
	அறல்	=	ஜலம்.
	பிராணமாஞ்சலி	=	நமஸ்காரம்.

ஸ்ரீ பர்த்ருஹரி

வைராக்கியசதக அரும்பதவுரை

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ச	கசு	பயினின்றி	பயனின்றி
ரு	உச	தயுைஞ்	தையுஞ்
௬	க௦	ாருண்பத்தை	தாருண்யத்தை
,,	உரு	மலெ[illegible]ாலி	யலெயொலி
,,	உ௬	கடற்பரி	கடப்பரி
கரு	சு	ணெதனிரே	ளெதனிரே
கஎ	உ	முண்டா	முண்டாம்
ருரு	உசு	பேசனவ்	பேசவை
ரு௮	எ	வையே	வையோ
சஉ	உ௦	லென்றே	லென்னே
சரு	எ	தவர்கே	தவர்கநே
ச௯	உக	பவனுய்ச், ஜ	பவனுய்ச், ச